37 ஆவது

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

Scan QR Code

ISSN 2792-1026

முக்காலமும் வென்று மூன்றாம் அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் துணிந்தெழு சஞ்சிகை

+94757000791 www.skytamilnews.com skytamil.lk@gmail.com

இதழ் - 37 நவம்பர் - டிசம்பர் ஆண்டு : 2024

@skytamil.lk

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்

Sky Tamil Media Network (Pvt) Ltd

ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙට්





## பவளம் காணும் ஸாஹிராவின் பரிணாமங்கள்



## வறுமை கற்றுத் தந்த ஓவியங்களால் வளர்ந்த ஓவியர் கவிதாஸ்



## ஹிரிகெட்டிய கடற்கரை சிறப்பு தொகுப்பு




## பேசும் பேனாக்கள்

01.நூல் :- வாப்பாக்கு

02. நூல் :- மழைச்சாரல் தொடர்கிறது






## சிறப்பு நேர்காணல்

# தன் ஆயுத எழுத்தால் தடம் பதித்த இளம் மங்கை ஸ்ரீ வினிதா

Sky தமிழ் Media Network
Reg No: PV 00249082

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙඩ්



**ஜே.எம்.பாஸித்**
ஸ்தாபக பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188



**எம்.எஸ்.எம்.ஸாகிர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
+94757000791

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே!

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (றஸீமி) - கத்தார்

**ஸ்தாபக பணிப்பாளர்:** ஜே.எம். பாஸித்
**முகாமையாளர்:** ஹுபைப் முஸம்மில்

**பிரதம ஆசிரியர்:** எம்.எஸ்.எம்.ஸாகிர்

**நிர்வாக குழு:**
ஜபீர் எம் மஹ்ரூப் - சாய்ந்தமருது
எம்.ஆர். சப்ராஸ் - புத்தளம்

**இணையாசிரியர்கள்:**
குலசிங்கம் கிலசன் - கல்முனை
ஸகியா பாறுக் - சம்மாந்துறை
முனீரா வாஹித் - பதுளை
மஜினா உமறு லெவ்வை - மாவடிப்பள்ளி
ஹப்ஸா பஹ்மீர் - இறம்புக்கணை

**ஆசிரியர் குழு :**
ஜவ்சன் அஹமட் - மருதமுனை
எம்.பஹ்த் ஜுனைட் - காத்தான்குடி
கமறுன் நிஸாம் (ஷாமென்) - கண்டி
ஏ.எம். கஸ்பியா வீவி - கல்முனை
சி. கற்பஹாசினி - பலாங்கொடை
பெனாஷில் ஷிப்னா - ஏறாவூர்
றிஹானா இஷாக் - கம்பளை
பயாஸா பாஸில் - கம்பஹா
மொஹமட் நிப்ராஸ் - வாழைச்சேனை

**வடிவமைப்பாளர்கள்:**
எம்.எச்.எம். ஷிப்கான் - பாலமுனை
ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் - அம்பாறை

**சந்தைப்படுத்தல் முகாமையாளர்:**
ஆஷிகா பர்சான் - கொழும்பு

**சந்தைப்படுத்தல் குழு:**
அவ்ஷபா நாகூர் - ஏறாவூர்

**சமூக ஊடக குழு:**
பாத்திமா சம்சுடீன் - சாய்ந்தமருது
றிஹாசா நிசார் - கத்தார்

**இணையத்தள பொறுப்பாளர்:**
அஸ்ரி இப்னு அமீர் - அட்டாளைச்சேனை

**தொகுப்பாளர்:**
அர்சிதா அமீர் - ஓட்டமாவடி

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com

# ஆசிரியர் கருத்து

## அனர்த்தமொன்று ஏற்படும் முன் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள்

நாட்டில் எதிர்வரும் டிசம்பர் 19 அன்று மீண்டும் ஒரு தாழமுக்கம் வங்காள விரிகுடாவில் உருவாகும் வாய்ப்புள்ளது எனவும் இது மேற்கு, வட மேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், சில மாதிரிகள் இது ஒரு புயலாக வலுப்பெறும் என வெளிப்படுத்துகின்ற அதேவேளை, சில மாதிரிகள் இதனை கிழக்கு மாகாணத்திற்கருகாக நகர்ந்து வடக்கு மாகாணத்திற்கு மிக அண்மித்து வரும் என காட்டுகின்றதாகவும், இதனை அடுத்த சில நாட்களின் பின்னரே உறுதிப்படுத்த முடியும் எனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை தலைவரும், சான்றுபடுத்தப்பட்ட வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

எனவே டிசம்பர் 25 ஆம் திகதி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. பின்னர் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையும் சில பகுதிகளில் மிகக் கன மழைக்கு வாய்ப்புள்ளது.

நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மீனவர்கள் மறு அறிவித்தல் வரை கடற்பகுதிகளுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது என அறிவித்துள்ளார். நாட்டில் இவ்வாறானதொரு புயல் அல்லது வெள்ளம் ஏற்படும் முன் நாம் சில முக்கிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அப்போது நமது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க முடியும்.

வெள்ளம் ஏற்படும் முன் நிலத்தை பார்வையிடவும்: உங்கள் பகுதியின் நிலைமையை அறிந்து, நீர்ப்பிடிப்புகள் அதிகமாக இருப்பதைக் கவனியுங்கள். பெரிய மழைகள் எதிர்பார்க்கப்படுகிறதா என்பதைக் கவனியுங்கள்: வெள்ளம் ஏற்படுவதற்கான எச்சரிக்கை விடயங்களைப் பின்பற்றுங்கள். மழையின் அளவு மற்றும் நிலத்தடி நீரின் உயர்வினைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வீட்டைப் பாதுகாக்க வீட்டு நிலத்தை உயர்த்துதல், கிணறு, நீர்த்தாக்கம் போன்றவற்றை சரி செய்யுங்கள்.
உங்களுக்குள் அவசர நிலைகளுக்கான கையேடுகளை அல்லது அறிவுறுத்தல்களை தயார் செய்யுங்கள்.

வெள்ள நீர் பெருக்க விரும்பும் இடங்களிலிருந்து பயணங்களைத் தவிர்க்கவும். புயல் அல்லது காற்று சூறாவளி பற்றிய எச்சரிக்கைகளை கவனமாகப் பின்பற்றுங்கள். வானிலை அறிவிப்புகளை கவனமாக பாருங்கள்.

புயல் ஏற்படும் பட்சத்தில் உங்களின் வீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வீட்டின் சாளரங்களை மூடி, கதவுகளை அடைக்கவும். மின்கம்பிகள் அல்லது அதிகமான மரங்களை நீக்கவும். பாதுகாப்பான இடங்களை அல்லது முகாம்களை முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

புயலின் பாதையில் அல்லது அந்த பகுதிகளில் பயணம் செய்வதைத் தவிர்க்கவும். சில நாட்களுக்குப் போதுமான உணவு மற்றும் நீர் இருப்பதை உறுதி செய்யுங்கள்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், புயல் அல்லது வெள்ளத்தின் போது உங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய உதவவும். வெள்ளம் மற்றும் புயல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் பாதுகாப்பான முறையில் நடந்து கொள்ள வேண்டும். வெள்ளம் ஏற்படும் போது, உடனடியாக இடம்பெயருங்கள்: வெள்ளம் ஏற்படும் நேரத்தில், கீழே உள்ள இடங்களில் இருந்தால் உடனடியாக உயரமான பகுதிக்கு சென்று பாதுகாப்பாக இருங்கள். வீடு அல்லது கடையில் இருந்தால், வெள்ளம் பரவக்கூடிய பகுதிகளை தவிர்க்கவும்.

மின் நெட்வொர்க்குடன் தொடர்பு கொள்ளாதீர்கள்: மின் கம்பிகள், எலக்ட்ரிகல் சாதனங்களைச் சாதகமாகப் பயன்படுத்தாதீர்கள். மின்சாரத்தை நிறுத்தவும். அத்தோடு வெள்ளமான பகுதிகளில் பயணம் செய்யக்கூடாது.

அவசர உதவிக்கு அருகிலுள்ள அதிகாரிகளுக்கு அல்லது மீட்பு குழுவிற்கு அழைத்து, உதவி பெறவும். புயல் அல்லது சூறாவளி ஏற்படும் போது, வீட்டின் உள்ளேயே பாதுகாப்பாக இருங்கள். திறந்தவெளியில் இருந்தால் களஞ்சியங்கள் அல்லது அடுக்குமாடி பகுதிகளில் ஒதுங்கிடுங்கள்.

சில நிமிடங்களில் வெளியே செல்லாதீர்கள். புயல் நிறைவடையும் வரை வெளியில் செல்ல வேண்டாம். புயல் மூச்செடுக்கும் போது வெவ்வேறு பாதைகள் மற்றும் காற்று நிலைகள் மாறப்படலாம். அவசர தொகுப்புகளை தயார் செய்யுங்கள். வெள்ளம் அல்லது புயல் போன்ற அச்சுறுத்தல்களில், தவிர்க்க முடியாத நிலையில் அவசரத்துக்கு தேவையான உணவு, நீர், முதலியவற்றை தயாராக வைத்திருங்கள்.

ஆகவே, புயல் மற்றும் வெள்ளம், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் தனித்தனியான திடமான பேராபத்தைக் கொண்டு வரக் கூடியது. அவை ஒன்றாக பலவித தாக்கங்களை ஏற்படுத்தலாம். இந்த சூழ்நிலையில், விழிப்புடன் இருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகளைப் பின்பற்றுவது மிக மிக அவசியமாகும்.

எம்.எஸ்.எம்.ஸாகிர்
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# முடியுதிர்வும் அதற்கான சிகிச்சையும்



Dr. ஜலீலா முஸம்மில் MBBS SL
வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை – ஏறாவூர்

சமகாலத்தில் பெண்கள் அனைவரும் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை முடி உதிர்தல் ஆகும்.

பெண்களின் அழகினை மேம்படுத்தவும் தோற்றத்தில் கவர்ச்சி ஏற்படுத்தவும் ஆரோக்கியமான, அடர்த்தியான கூந்தல் அவசியமாகிறது. வயது போன பெண்கள் மட்டுமல்ல, இளம்பெண்களும் இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்களும்கூட இவ்வாறான பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர். எனவே முடி உதிர்தலில் இருந்தும் முடி மெலிந்து போதலில் இருந்தும் காத்துக் கொள்வதற்கு அதற்கான காரணங்களைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். எனவே தீங்கான விடயங்களில் இருந்து நாம் விடுபட்டு ஆரோக்கியமான கூந்தலை அல்லது முடியைப் பெற்றுக் கொள்வதற்கு அது வழிகோலும்.

முடி உதிர்தல் அலோபீசியா (Alopecia) எனப்படுகிறது. முடி உதிர்தல் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் பொதுவானது மற்றும் இதற்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும். உச்சந்தலையில், புருவங்கள், கண் இமைகள் அல்லது உடலின் பிற பகுதிகளில் முடி உதிரலாம். இது படிப்படியாக அல்லது திடீரென ஏற்படலாம் மற்றும் அனைத்து வயதினருக்கும் மற்றும் பின்னணியில் உள்ள நபர்களையும் பாதிக்கும் நிலை ஏற்படலாம்.

மிகவும் பொதுவான வகை (மரபணு ரீதியானது) ஆண்ட்ரோஜெனெடிக் அலோபீசியா அல்லது பேட்டர்ன் வழுக்கை என அழைக்கப்படுகிறது.

முடி உதிர்வதற்கான காரணங்கள் உடல் ரீதியானதாகவும் உணவு ரீதியானதாகவும் மற்றும் சூழல் சம்பந்தப்பட்டதாகவும் காணப்படுகிறது. அக்காரணங்களை அனைவரும் அறிந்து கொள்வது நல்லது.

**1)மன அழுத்தம்/ அதீத உணர்வு**

இது உடலில் பல்வேறுபட்ட ஓமோன் மாற்றங்களை ஏற்படுத்துவதால் முடி உதிர்தல் ஏற்படுகிறது. எனவே எப்போதும்

மகிழ்ச்சியாக இருப்பதற்கு முயற்சித்தல் அவசியமாகும்.

கடினமான நேரங்கள் டெலோஜென் எ∴ப்ளூவியம் எனப்படும் ஒரு நிலையை ஏற்படுத்தும், இதனால் முடி உதிர்கிறது. இது பெரும்பாலும் காலப்போக்கில் சரியாகி விடுகிறது.

**2) உறக்கமின்மை**

போதுமான அளவு தூக்கம் இல்லாதிருத்தல் அல்லது சரியான நேரத்திற்கு தூங்காமை போன்ற காரணங்களும் முடி மெலிதலை உருவாக்கும்.

**3) கர்ப்பம் தரித்தல்**

கர்ப்பம் தரித்த பெண்ணின் உடலில் ஈஸ்ட்ரஜன் ஹோமோனின் அளவு அதிகமாக இருப்பதால் அந்தக் காலத்தில் முடி வளர்ச்சியும் அடர்த்தியும் அதிகமாக காணப்படும். ஆனால், குழந்தை பேற்றின் பின்னர் இந்த ஈஸ்ட்ரோஜன் ஓமோனின் அளவு உடம்பில் குறைந்து இயல்பு நிலைக்கு வந்து விடுவதால் முடி உதிர்தல் மீண்டும் ஏற்படும்.

**4) ஓமோன் மாற்றங்கள்**

**I) PCOD**

PCOD எனப்படுகின்ற பொலி சிஸ்டிக் ஓவேரியன் டிசிஸ் நோயானது பெண்களின் சூலகங்களில் ஏற்படும் ஒரு வகையான நீர்க்கட்டிகள் ஆகும். இந்த நிலையின் போது அன்றஜன் ஓமோன்களின் அதிகரித்த தன்மையானது நீர்க்கட்டிகளையும் மாதவிடாய்ச் சிக்கல்களையும் நீரிழிவு நோயையும் பெண்களுக்கு உருவாக்கி விடுகிறது. இந்த நிலையின் போது முடி உதிர்தலும் அதிகமாக காணப்படும்.

**II) தைரொய்டு**

தைரொய்டு ஓமோன் குறைவடையும் நிலையான ஹைபோ தைரொடிசம் எனும் நோயானது முடி உதிர்தலை ஏற்படுத்தும் இன்னொரு நோயாகும்.

சில உடல்நலப் பிரச்சினைகள் மற்றும் ஓமோன் மாற்றங்கள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ முடி உதிர்வை ஏற்படுத்தக்கூடும்.

**5) பரம்பரைக் காரணங்கள்**

பரம்பரை ரீதியாகவும் முடி உதிர்தல் ஏற்படலாம். மரபணு குறைபாடுகள் வழிவழியாக கடத்தப்படுவது இதற்கான காரணமாக அமைகிறது. இது ஆண்ட்ரோஜெனிக் அலோபீசியா என்று அழைக்கப்படுகிறது மற்றும் ஆண்களுக்கு மிகவும் பொதுவானது.



**6) இரத்தச் சோகை**

அனிமியா எனப்படும் இரத்தச் சோகை நிலையானது முடி உதிர்தலுக்கு இன்னொரு

காரணமாகும். எனவே இரத்தச் சோகை உள்ளவர்கள் அதற்குரிய காரணங்களைக் கண்டுபிடித்து நிவாரணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். இரத்தச் சோகைக்கான உணவு முறைகளையும் சிகிச்சையையும் பெற்றுக் கொள்வது சிறந்தது.

### 7) உணவு முறை

தற்காலத்தில் அனைவரும் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவுகளை தவிர்த்து இயற்கை முறையான உணவுகளை தவிர்த்து துரித உணவுகளிலேயே அதிக நாட்டம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் குறைந்து முடி உதிர்தல் ஏற்படுகிறது.

### 8) புரதக் குறைபாடு

முடி உதிர்ந்து புதிதாக வளரும் போது அதற்கு கட்டாயம் புரதச்சத்து அவசியமாகிறது. போதிய அளவு புரதம் எடுக்கப்படாமல் இப்போது புதிய முடி உருவாதல் தடைப்படும்.

### 9) கருத்தடை மாத்திரைகளின் பயன்பாடு

கருத்தடை மாத்திரைகளை பயன்படுத்தும் போது உடலில் இயல்பான ஓமோன் நிலை பாதிக்கப்பட்டு, குறிப்பிட்ட ஓமோன்களின் அளவு மேலோங்கி காணப்படும். இதனால் முடி உதிர்தல் ஏற்படலாம்.

### 10) தலைமுடி சுகாதாரம் பேணாதிருத்தல்

தலை முடியை சுத்தமாகவும் நோயற்ற நிலையிலும் சிக்கல் இல்லாமலும் வைத்திருத்தல் அவசியமாகும். அவ்வாறான நிலை பேணப்படாமல் போகும்போது முடி உதிர்தல், முடிவளர்ச்சி பாதிப்பு ஏற்படலாம்.

### 11) சிகை அலங்காரம்

தற்காலத்தில் காணப்படும் சிகை அலங்கார முறைகளும் அதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை மருந்துகளும் முடி உதிர்தலில் செல்வாக்குச் செலுத்துகிறது. இன்னும் சொல்லப் போனால் முடியை இறுக்கமாக கட்டுதல் முடி அழகுக்காக பல்வேறுபட்ட இரசாயனங்களை பயன்படுத்துதலும் முடி ஆரோக்கியத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது. போனிடெயில் அல்லது ஜடை போன்ற இறுக்கமான சிகை அலங்காரங்களில் இருந்து இழுவை அலோபீசியா ஏற்படும்.

### 12) பூஞ்சை தொற்றுகள்

டீனியா எனப்படும் ஒரு வகையான பூஞ்சை தொற்று முடி உதிர்தலை ஏற்படுத்தும். தொற்று ஏற்பட்ட வளைய வடிவ இடங்களில் முடி உதிர்ந்து விடும்.

### 13) மருந்துகள்

சில மருந்துகள் பக்கவிளைவாக முடி உதிர்வை ஏற்படுத்தும்.

### 14) கதிர்வீச்சு

தலையில் கதிர்வீச்சு சிகிச்சைக்குப் பிறகு முடி உதிர்தல் ஏற்படலாம்.

### 15) முடி சிகிச்சைகள்

முடி சிகிச்சைகள் முடியைச் சேதப்படுத்தலாம் மற்றும் உதிர வைக்கலாம், குறிப்பாக அவை வடுக்களை, காயங்களை ஏற்படுத்தினால் முடியுதிர்தல் நிகழும்.

இதன் தொடர்ச்சியை
அடுத்த இதழில் எதிர்பாருங்கள்....

# ஷஹீது பறவைகள் நாம்...




எமக்கொன்றும் தெரியாது
நமக்கொன்றும் நிகழாது
ஊரெல்லாம் தானே அகோர மழை
நமக்கு நிகழுமோ மரண நிலை
எண்ணித்தானே பாதை வந்தோம்
வீடு செல்ல துணிந்து வந்தோம்.

நீர் அறிந்ததுண்டா?
அவன் நினைவில்,
அழகிய பீடத்தில்,
அன்றாடம் சுவர்க்கத்தின் தாகத்தில்,
பிரயோஜனக் கல்வி கற்க
பிள்ளைகளாய் முன் வந்தவர்கள் நாம்.!

விடாத மழை
விவேகம் காண
வீடு சென்று,
விரைவாகத் திரும்புங்கள்
வீற்றிருந்தோர் வாக்கு.

ஆமாம்-மீண்டுமொரு விடுமுறை
உம்மாவும் காத்திருப்பார்
வாப்பாவும் என்னை நினைத்திருப்பார்
அனர்த்த நிலை முற்றுப்பெறும்
அன்பர்கள் நாம் மீண்டும் சந்திக்கலாம்.
நமக்குள் சிறு பேச்சு.

வழமை போல் இல்லை
ஏதோ நம் மனங்கள் எல்லாம்
எல்லையற்ற வெறுமை
ஏக்கம் பிறக்க
ஏதோ கனக்க
இதுவோர் தொலைதூர
பயணத்திற்கான அழைப்பு!

வெள்ளத்தின் வியாபித்தலில்
வேர்விட்ட நீரமுக்கத்தில்
எதிர்பாராத ஜனாஸா
நமக்காக விதிக்கப்பட்டு விட்டது.

எல்லோருக்கும் வலிக்கிறதா?
எம்மை அறியா உள்ளங்களும்
துடிக்கிறதா?
சற்று பொறுங்கள்.
இது நம்மிடத்தே ஓர் அழகான பயணம்
அவனருளில் நாம் சென்றடையும் உயர்
சுவனம்!
இன்ஷாஹ் அல்லாஹ்!

அன்பான என் பெற்றோர்களே!
அல்லாஹ்வை நோக்கிய இல்மின்
தேடலில் வீடு வராமலே
உயிர் துறந்தவர்கள் நாம்!

அவன் நேசிப்பில் மிக அருகாமையில்
நாம்!

சுவனத்து வாடை நம்மிடையே வீச
உங்கள் கண்ணீர் துளிகள் எம்
ஆன்மாக்கள் முன் அழாதிருக்கட்டும்.

அடிக்கடி நினைவுறுத்தப்படும்
நிரந்தரப்பயணம்
செல்ல முடியாது
சென்றால் மீளத் திரும்ப முடியாது.
ஆனால், மிக அழகானது
எப்போது தெரியுமா?

இறையை நேசிக்க சென்ற தேடலிலே
இறைவன் அழைத்துக் கொண்ட மரணம்.
நமக்கு கிடைத்தது
உமக்கும் பாடமானது.

எம்மை எண்ணி உருகும் உறவுகளே!
உதட்டோரம் உங்கள்
பிரார்த்தனைகள் நமக்கானதாகட்டும்.
மரணம் உண்மையானது உறவுகளே!
மனங்கள் அவனுக்கு உரியதாகட்டும்.

முனீரா அப்துல் வாஹித்
சில்மியாபுர

# பெண்ணே! தியாகம்தான் நீ என்றும்



அவசர சிகிச்சை பிரிவினுள்ளே
அவதிப்படுகிறாள் என்னவள்
நெஞ்சுவலி மாதிரி ஏதோவொன்று
வந்துபோனதாய் சொல்கிறார்கள்..

விறாந்தையில் குறுக்கு நெடுக்காய்
விடியவிடிய சுற்றிவிட்டேன்
விடிந்த பின்பும் நல்லசேதி
வந்ததாகத் தெரியவில்லை.

சுபஹினை தொழுதவுடனே
சுற்றியுள்ள சொந்தங்களும்
நண்பர்கள் ஐவருமாய் என்னை
தட்டி எழுப்பிவிட
தடுமாறி
பாய்ந்தடித்து எழும்பித்தான் நின்றிட்டேன்.
சொன்ன சேதி தனைக் கேட்டு
தலைசுற்றித்தான் போய்விட்டேன்.

மருத்துவங்கள்
பலவிதமாய்
செய்திருந்தும்
இறைநியதி ஒன்றை
இல்லையென நினைக்கலாமா?

உயிர் நீத்த உடலாக என்னவளைத்
தந்தனரரே!

குளிப்பாட்டும் வேலையதை விறுவிறென்று
செய்யவென்று
சோதரிமார் மூவருடன் சொந்தங்களும்
சேர்ந்திருக்க.....

என் மனைவி ஜனாஸாவை நானேதான்
குளிப்பாட்ட வேண்டுமென்று
அங்கு நான் போய்விடவே
வந்தவர்கள் பின்வாங்க
ஒரு கோப்பை நீரெடுத்து
ஊற்றிவிட்டு பார்க்கின்றேன்.

என் மனைவி இவள்தானா
இவளைத்தான் கரம் பிடித்தேனா
முகமோ பிரகாசிக்க பளபளக்கும்
வலண்டினா சேலை போன்று
வழுவழுப்பாய் இருந்தாளே! அன்று
நாற்பது வருடத்திலே
நானூறு மாற்றங்களா...

முகமோ மிகச் சுருங்கி
கன்னங்களோ காய்ந்தபடி
தொந்திவைத்து
அடிவயிற்றில் ஆழமான
ஆறு இஞ்சி அளவினிலே
அகலமான கோடு ஒன்று...
ஓ.. என் பிள்ளைச்செல்வம் மூன்றையுமே
அறுவை சிகிச்சை மூலம் பெற்றதனால்
உண்டான தழும்பென்று அவள்
ஒரு தரமும் சொன்னதில்லை.

வாழைத்தண்டு கால்களாக
வாழும்போது இருந்த கால்கள்
முற்றிக் காய்ந்த வெண்டி போல
கறுப்பாகி மிகச் சுருங்கி
பளபளக்கும் சிலையாக
கல்யாணத்தன்று நான் கண்டேன்.

இன்று கருகிவிட்ட வாழைக்குலையாய்
இன்று உன்னைக் காணுகின்றேன்.

அவசரமாய்க் குளிப்பாட்டி
கபனிட்டு முடித்த பின்னே
ஆயிரம் பேர் வந்து நின்றே
அழகாய் இருக்கு மையத்தென்று
அணி அணியாய் சென்றபடி.

தொழுவித்து தோள் மேலே
தூக்கி நானும் செல்கையிலே
தாங்க மச்சான் என்றபடி
மச்சினனோ கைநீட்ட
வேணாம் மச்சான் என்றபடி
வேர்வையுடன் நடக்கின்றேன்.
மோட்டர் பைக்கில் செல்கையிலே...

பல தடவை துடைத்திருப்பாய்
என் பிடறியில் உன் கையால்
இப்போது அதைத் துடைக்க
யாரம்மா இருக்கின்றார்.

நீ வாழும் போதினிலே
ஒரு சில வேலை தன்னை
நான் கூட பகிர்ந்தெடுத்து
செய்துகூட தரவில்லை
தண்ணீரைக் கொண்டு வர
உனைத்தானே அழைத்திட்டேன்.

பேஸ்புக்கைப் பார்த்தபடி
டீ வாங்கிக் குடித்தபடி
சமையலறை வேலையென்று
எதையுமே நான் செய்யவில்லை.

எண்ணி எண்ணி விம்முகையில்
எழுப்புங்க வாப்பா என்று
என் மகனோ கூறுகையில்
ஏங்கி நானும் அழுது விட்டேன்.

வாரமொன்று போய்விடவே
வந்தவர் எல்லாம் கலைந்திடவே
ஏதாச்சும் குடிக்கவேணும்
என்றெண்ணி நிற்கையிலே
ஒரு கிளாசில் கடுமையான
குளிருள்ள பானமதை
ஒரு பேத்தி ஓடிவந்து
தந்துவிட்டுப் பாய்ந்து விட்டாள்.

அதைத்தூக்கி நான் பார்த்து
அண்ணாந்து பருகுகின்றேன்
அந்நேரம் உண்மையிலே நான்
அருந்துவது தேநீரென்று
அன்பான என் மனைவி
மட்டுமே அறிவாள்.

முழுமூச்சாய் குடித்துவிட்டு
மூச்சிறைக்க உட்கார்ந்தேன்
முகம் முழுக்க வியர்த்தபடி
மயக்கமாக விழுகின்றேன்.

இடது பக்க மேல் நெஞ்சில்
இறுக்கியபடி ஏதோவொன்று
சுவரினிலே சாய்ந்தபடி அழைக்கின்றேன்.
மகள் பெயரை
பாதி மூடிய விழியினுள்ளே
சிரித்தபடி மனைவி முகம்.

அம்பியூலன்ஸ் வண்டி வந்து
அவசரமாய் செல்ல முன்னர்
கடன் எழுதிய கொப்பியதைக்
கொடுத்து விட்டேன் மகனிடமே..

விடுதியிலே வைத்தியரோ
விரித்துவிட்டார் கையைத்தான்
வீட்டுக் கொண்டு சென்று
மற்றவற்றைப் பாருமென்றார்.

காதினுள்ளே அடிக்கடியென்
தியாகியான மனைவி சொல்லும்
வார்த்தை ஒன்று அசரீரியாய்
வந்தொலித்துசெல்கிறது.

அந்த வார்த்தை என்னவென்று
உங்களுக்கும் சொல்லுகின்றேன்.

மனைவியுடன் வாழும் வரை புது
மணவாளன் தான் எல்லோருமே
அவள் விட்டுப் போய்விட்டால்
மையத்துதான் ஆண்களெல்லாம்.

**முப்லிஹா பிர்தவ்ஸ்**
**காத்தான்குடி**

# மழைப் பொழுதுகள்



நீலவானும்
கடலும் காதல் கொண்டு
கன்னத்தோடு கன்னம் வைத்து
சத்தமில்லாமல் உரசி சிலுசிலுத்து
வாய் விட்டு சிரித்த சிரிப்பு வேகமான
கடலலையாய் கரை தொட

உச்சி பார்த்து நச்சுன்னு இருந்து
தென்றல் தீண்ட
நாணம் கொண்டு சிணுசிணுத்த
தென்னம் கீற்றுகள்
பேயாட்டம் ஆடுகிறது
காற்றின் சீற்றத்தால்

நீரோடும் திசையெங்கும்
வழிமறித்து
வானுயர கட்டடம் கட்டியதால்
வழி தெரியாமல்
வீடு வாசல் எங்கும் வெள்ளநீர் புகுந்து
காசில்லாமல் கழுவிச் செல்கிறது

ஒப்பனை இல்லாப் பெண்ணைப் போல்

கரடுமுரடாய் இருந்த வீதி நிலமெல்லாம்
பூசி மெழுகி பளபளக்கின்றது
மழைத்துளியின் பரிசத்தால்
வீட்டுக்குள் அடங்கி
தடவி தடவி டிஜிடல் ஊடகத்தில்
மூழ்கிய விரல்கள் மெல்ல கைவிரிக்கிறது
மழையின் சாரலில் அழகிய நடனமாட

குளிரில் விறைத்த உடலிற்கு சூடேற்ற
கிழங்கு அவியலும்
புளி மாங்காய் கடையலும்
சுடச்சுட தேங்காய் ரொட்டியும்
சம்பலும் சோளம் கச்சான் என நாக்கும்
சுவைக்க இஞ்சி தட்டி இதமான சூட்டில்
ஆவி பறக்கும் தேனீரும் அருமையான
நிகழ்வுகள் தான்..
என்ன தான் சோகமென்றாலும்
சுகமாய் தான் இருக்கிறது
மழைப்பொழுதுகள்.

ஏ.எம்.கல்பியா விவி
நற்பிட்டிமுனை

---




கோடையில் மணக்கும்
பூக்களை அறிந்ததுண்டா..?

அடைமழையில் நிமிர்ந்திருக்கும்
மரங்களை ரசித்ததுண்டா..?

புயலுக்கு அஞ்சாத
நாணலைப் படித்ததுண்டா..?

தயவை எதிர்பார்ப்பவரின்
கவலைகளை துடைத்ததுண்டா..?

நிலவில் கால்பதித்தவனின்
நெஞ்சுரத்தில் திளைத்ததுண்டா...?

பிறர் நலவில் தொடர் மகிழ்ச்சி
அடைந்ததுண்டா..?

ஆபத்தில் சிக்கியிருப்பவனின்
ஏக்கங்கள் புரிந்ததுண்டா..?

அவமானத்தால் குனிந்தவனை
அரவணைத்து ஏற்றதுண்டா..?

மழலைமொழி கேட்க
ஆவலாய் இருந்ததுண்டா..?

மனதில் எப்போதும்
பிரார்த்தனைகள் எழுந்ததுண்டா..?

நிராகரித்துச் செல்பவரை
சுதந்திரமாய் விட்டதுண்டா..?

உச்சகட்ட கோபத்தில்
உணர்வுகளை அடக்கியதுண்டா..?

உண்மையை எப்போதும்
நெஞ்சத்தில் நிறுத்தியதுண்டா..?

ஆம் எனின் ஆர்ப்பரித்துக்கொள்
நீ மனிதமுள்ள மனிதன்...!!!




நீ அல்ல
நான் அல்ல
எவர் நினைத்தாலும்
மீண்டும் ஒரு முறை
கிடைக்காத பொக்கிஷம் நேரம்.

நீ இழந்த
இந்த ஒரு கணத்தை
மீண்டும் பெற முடியாது
நீ வீணடித்த நிமிடத்தை மீண்டும்
சந்திக்க முடியாது.

காலம் தாழ்த்திய செயலை மீண்டும்
உரிய காலத்தில் செய்ய முடியாது.

இழந்த பருவங்களை
மீண்டும் பெற முடியாது.
இழந்த வாலிபத்தை
மீண்டும் பெற முடியாது.

நீ வெற்றி பெற படிக்கல்லாகவும்
உன்னை தோற்கடிக்க குத்துக்கல்லாகவும்
இருக்கும்.

நேரம் இது இல்லாது
போயின் மீண்டும் பெறவோ
வாங்கவோ முடியாது.
நேரம் உன் கையில்
இருக்கும் போதே
வெற்றியை உனதாக்கி கொள்..

# பெண் ஆளுமை அறிமுகம்



## வினிதா உதயகுமார்

**தன் ஆயுத எழுத்தால் தடம் பதித்த இளம் மங்கை**
**இளம் பெண் எழுத்தாளர்**

நேர்காணல் : ச.தனுக்ஷ்கா,
ஊடகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

திருகோணமலை நகரைச் சேர்ந்த நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் வினிதா உதயகுமார். தாய், தந்தை, சகோதரன் என்று சிறிய அழகான குடும்பத்தில் பிறந்த இவர், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை 2023 ஆம் ஆண்டு நிறைவு செய்ததுடன் இன்று உலகளாவிய தளத்தில் தனது ஆக்கபூர்வமான எழுத்தால் பல நாவல்களைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கும் 27 வயதுடைய இளம் எழுத்தாளராக தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். சுமார் 30 க்கும் மேற்பட்ட நாவல்களை மூன்று ஆண்டுகளுக்குள் எழுதியுள்ளார். அதில் 16 நாவல்கள் இந்தியாவில் நூலாக வெளியிடப்பட்டுள்ளன.

எழுத்துத் துறையில் தனக்கென புனைப் பெயரையும் வைத்துக்கொண்டு “ஸ்ரீ வினிதா” என்ற பெயரில் தொடர்ந்து எழுத்துத் துறையில் பயணித்துக் கொண்டிருக்கிறார். இவரது ஆக்கங்கள் அழகிய தமிழ் மகள், பிரதிலிபி, ஏந்திழை, அமேசான் போன்ற தளங்களிலும் ஸ்ரீ வினிதா தமிழ் ஆடியோ நாவல்கள் என்ற youtube தளத்திலும் மிர்ச்சி எப்.எம்.மிலும் காணப்படுகின்றன.

இலங்கை தொடங்கி உலகம் முழுவதும் தனதுபடைப்புக்களை நிகழ்நிலைத் தளங்கள் ஊடாக வெளியிட்டுக் கொண்டிருக்கும் இளம் பெண் எழுத்தாளரான ஸ்ரீ வினிதா அவர்களுடனான நேர்காணல் இது.

**01. ஒரு பட்டதாரியாக ஆரம்பித்த பயணம் எழுத்தாளராக மாறியதன் காரணம் என்ன?**

தந்தையை இழந்த பின்னர் என் தாயாரின் தனிமையை போக்கிக் கொள்ள உதவிய வாசிப்புப் பழக்கம், என்னையும் கொஞ்சம் தழுவிக் கொண்டது. சாதாரண தரப் பரீட்சை எழுதியதன் பின்னர் எனது பொழுதுபோக்கு நேரங்களில் நாவல்களைத் தேடி வாசித்தேன். நான் முதன் முறையாக படித்த நாவல் “அது ஒரு மழைக்காலம்”.

அன்றிலிருந்து நாவல்களை வாசிப்பதில் விருப்பம் எனக்கு ஏற்பட்டது. பல்கலைக்கழகங்களிலும் நிகழ்நிலைத் தளங்களிலும் ரமணிச்சந்திரன் அவர்களின் குடும்ப நாவல்களை தேடி வாசிப்பேன். எனது அனுபவத்தை சக நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வேன். அப்போதுதான் என்னை நாவல் எழுதுமாறு என் சக நண்பர்கள் ஊக்கப்படுத்தினர். வாசிப்பில் இருந்த ஆர்வமும் நீண்ட நாட்களாக நாவல்களை வாசிக்கும் பழக்கமும் என்னை நாவல்கள் எழுதுவதற்குத் தூண்டின. தமிழ் மொழியில் எனக்கிருந்த ஈடுபாடு என்னை மேலும் ஊக்கப்படுத்தியது. நாவல்கள் எழுதுவதில் சிரமங்கள் ஏற்படவில்லை.

02.உங்கள் முதல் நாவலான “வஞ்சம் ஏனோ வசீகரா” பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முடியுமா?

இந்தியத் தளமொன்றில் நாவல்களுக்கான பிழைத்திருத்தம் (Corrections) பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அத்தளத்தின் உரிமையாளர் எனது திறமையைப் பார்த்து அவர்களது தளத்திலேயே எனது ஆக்கங்களை வெளியிடுவதற்கான வாய்ப்பை அளித்தார். நான் எதிர்பார்க்காத வரவேற்பை எனது முதல் நாவல் பெற்றுத்தந்தது. முதன் முறையாக நாவலை பதிவிடும்போது சிறு பதற்றம் எனக்குள் தோன்றியது. காரணம் இந்திய மொழி நடையை கையாள்வது சற்று கடினமாக இருந்தது. இதனால் எனது முதலாவது நாவலில் ஆங்காங்கே இலங்கைத் தமிழையும் பயன்படுத்தியுள்ளேன். ஆனால் இன்று ஒன்றரை மாதத்தில் ஒரு நாவலை எழுதி முடிக்க முடிவதுடன், இந்திய மொழிநடையை என்னால் இலகுவாகவும் சிறப்பாகவும் கையாள முடியும்.

03.ஓர் எழுத்தாளராக நீங்கள் சாதித்த விடயம்?

அமேசான் என்பது யாவரும் அறிந்த உலகளாவிய தளமாகும். இதில் பல்லாயிரக்கணக்கான நூல்கள் பல்வேறு மொழிகளில் பதிவிடப்படுகின்றன. அமேசான் தளத்தில் தமிழ் நூல்களில் மூன்று பிரிவுகளில் முதல் இடத்தை எனது நாவலான “ஊதாப்பூ காதலி” பெற்றது. இதைத் தொடர்ந்து பல நாவல்கள் பெஸ்ட் செல்லராக அமேசான் தளத்தில் தொடர் வரவேற்பை பெற்று அதிக வாசகர்களை எனக்கு ஈட்டித் தந்தன. இது என் எழுத்திற்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்று நான் கருதுகிறேன்.

04. தற்போது எழுத்துத் துறையில் உங்கள் இலக்கு என்ன?

ஐந்து ஆண்டுகளில் 100 நாவல்களை எழுதி வெளியிட வேண்டும் என்பதே என்னுடைய தற்போதைய இலக்காகும். எழுத்துத் துறைக்கு வந்து மூன்று ஆண்டுகளில் நான் 32 நாவல்களை எழுதியுள்ளேன்.

05. நீங்கள் ஆர்வம் காட்டும் வேறு துறைகள்?

விரிவுரையாளர் பணியில் அதீத விருப்பமுள்ளது. தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில், இந்து நாகரிகம் கற்கையில் இளங்கலைமாணி பட்டம் பெற்றுள்ளேன். அத்துடன் First class Upper, தங்கப் பதக்கம் பெற்று மூன்று மாத காலம் உதவி விரிவுரையாளராக பணியாற்றினேன். தற்போது எம்.பில் (M.phill) கற்கையைத் தொடர்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். ஒரு விரிவுரையாளர் ஆவதும் எனது இலக்காகும். எழுத்துத் துறை மற்றும் விரிவுரையாளர் பணி இரண்டையும் என்னால் சமமாக கொண்டு செல்ல முடியும் என்று நம்பிக்கையுள்ளது.

06. எழுத்துத் துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

எழுத்துத் துறையில் இடைவிடாது பயணித்தல் மிக அவசியமாகும். ஏனெனில், போட்டியாளர்கள் நம்மை முந்தி செல்லக்கூடும். வாசகர்களுக்கும் அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் நான் நாவலை எழுத வேண்டும். வாசகர் வட்டத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக முழு முயற்சியுடன் செயலாற்ற வேண்டும். இதனால் எனது அன்புக்குரியவர்களுடன் குடும்பத்தாருடன் என்னால் நேரத்தை அதிகம் செலவழிக்க முடியாதுள்ளது. இதனால் எனது அன்புக்குரியவர்களுடன் கருத்து வேறுபாடுகள் வருவதுண்டு. நாவலை எழுதி முடிப்பதிலேயே கருத்தாய் இருப்பேன். இப்போது எழுத்துப் பணிக்கும் குடும்பத்திற்கும் நேரம் ஒதுக்குவதற்கு கற்றுக் கொண்டேன்.

மிக முக்கிய பிரச்சினையாக இலங்கை எழுத்தாளர்களது படைப்புகளை அமேசான் தளத்தில் சுயாதீனமாக வெளியிட முடியாதுள்ளது. காரணம், இலங்கை கணக்கை அமேசான் ஏற்றுக்கொள்வதில்லை. எமக்கு தெரிந்தவர்கள் வேறு நாட்டில் இருப்பார்களாயின்; அவர்களின் உதவியுடன் வெளிநாட்டு வங்கிக் கணக்கின் ஊடாக நூல்களை பதிவிட முடியும். இது இலங்கை எழுத்தாளர்களுக்கு பாரிய தடையாகும். இதனால் இலங்கை எழுத்தாளர்களுக்கான வாய்ப்பானது குறுகிய வட்டத்திற்குள்ளேயே முடக்கப்படுகிறது.

07. எழுத்துத் துறையில் உள்ள வாய்ப்புகள் பற்றி கூறுங்கள்?

இன்றைய சூழ்நிலையில் வருமானம் என்பது மிக முக்கியமான விடயமாகும். சாதாரணமாக 70,000 ரூபாவிற்கு






அதிகமாகவே இத்துறையில் உழைக்கலாம். இதற்கு முழுமையான ஈடுபாடும் அர்ப்பணிப்பும் அவசியமாகும். ஒரு நாவலுக்கு நான் எந்தளவு ஈடுபாட்டுடன் செயற்படுகிறேன் என்பதைப் பொறுத்து நாவலுக்கான வருமானம் கிடைக்கும். எத்தனை வாசகர்கள், பார்வையாளர்கள் எனது நாவலினை பெறுகிறார்களோ அதன் அடிப்படையில் நாவலுக்கான பெறுமதி மற்றும் வருமானம் கிடைக்கும். மேலும் ஆடியோ நாவல்கள் மூலமும் வருமானம் பெறலாம். தமிழ் மொழியில் மாத்திரம் ஆக்கங்களை வெளியிடாது, சர்வதேச மொழியான ஆங்கில மொழியில் வெளியிடுவதன் மூலம் வருமானத்தை அதிகரிக்கலாம். அந்தவகையில் எதிர்காலத்தில் எனது நாவல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடுவதற்கான எண்ணமுள்ளது.



**08.உங்கள் நாவல்களில் ஈழம் சார்ந்த போர் அனுபவங்கள் காணப்படாமைக்கான காரணம்?**

உலகளாவிய தளங்களில் வெளியிடும் நோக்கில் ஒரு நாவலை எழுதும்போது அனைவருக்கும் பொதுவான மொழி நடை, பொதுவான கருத்துக்களை உள்வாங்கி அமைதல் மிக அவசியமாகும். அந்த வகையில் இலங்கையர்களது மொழி நடை அனைவராலும் இலகுவில் புரிந்து கொள்ள முடியாது. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் குறித்து நாவல் எழுத வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. இருப்பினும் சில நாடுகளில் உள்ள தணிக்கை சார்ந்த விடயங்களாலும் கட்டுப்பாடுகளாலும் போர் அனுபவம் குறித்து வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் என்னால் எழுத முடியவில்லை. எனது நூல் உலகளாவிய தளங்களில் பதிவேற்றப்படுவதால் சில கட்டுப்பாடுகள் இதில் தாக்கம் செலுத்துகிறது. இருப்பினும் எதிர்காலத்தில் எமது போர் சார்ந்த அனுபவங்களை கொண்ட நாவலை எழுதத் திட்டமிட்டுள்ளேன்.






**09. எழுத்துத் துறையில் கடந்த மூன்று ஆண்டுகள் பயணம் பற்றி கூறுங்கள்?**

எனது இரண்டு வயதிலேயே என் தந்தையை இழந்தேன். தந்தையை இழந்த என் குடும்பத்திற்கு வருமான ரீதியாக பல சவால்கள் ஏற்பட்டன. ஒரு தந்தை இருந்திருந்தால் குடும்பத்திற்கு எவ்வாறு பக்கபலமாக இருப்பாரோ, அந்த ஆறுதலையும் மன தைரியத்தையும் அனைத்து வகையிலும் எழுத்துத் துறை எனக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. என் குடும்பத்திற்கு வருமானம் கிடைப்பதற்கு ஒரு வகையில் இந்த எழுத்துத் துறையும் காரணமாகும். வருமானத்தை கடந்து எனது தனிப்பட்ட திறனை வளர்ப்பதற்கும் நான் யார் என்பதை அடையாளப்படுத்துவதற்கும் பக்க பலமாக இருந்தது எழுத்துத்துறையாகும். இன்று இந்தியாவில் பலருக்கு எனது நாவல்கள் பற்றி தெரியும், மிர்ச்சி எப்.எம் (Merchy Fm), முதல் ஏந்திழை, அமேசான் தளம் போன்றவற்றில் தொடர்ந்து நாவல்களை வெளியிட்டு வருகிறேன். இந்தியாவில் 16க்கும் மேற்பட்ட நாவல்களை புத்தகமாக வெளியிட்டுள்ளேன். பல்கலைக்கழகப் பட்டதாரி என்னும் அடையாளத்திற்கு அப்பால் என்னை ஓர் எழுத்தாளராக இந்த

உலகிற்கு அறிமுகப்படுத்தியது இந்த எழுத்து துறையாகும்.

*10. உங்கள் எழுத்து நடை வேறுபட்டு இருப்பதற்கான காரணம் என்ன?*

ஒவ்வொரு நாவலும் வித்தியாசமாக இருக்க வேண்டும் என எண்ணுவேன். ஒரே கருவையும், ஒரே பாணியில் தொடர்ந்து எழுவதில் எனக்கு ஈடுபாடு இல்லை. எனவே ஓர் எழுத்தாளராக அனைத்து விடயங்களையும் உள்வாங்குதல், புதிய விடயங்களை கற்றுக் கொள்ள தினமும் முயற்சிப்பேன். இதனாலேயே எனது ஆக்கங்களில் திகில், நகைச்சுவை, குற்றங்கள் மற்றும் த்ரில்லிங், காதல், பெண்ணியம் என பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

*11. உங்களைப் போன்று சாதிக்க விரும்பும் பெண்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?*

பெண்கள் சுதந்திரமாகவும், பிறரில் தங்கி வாழாது பழகிக்கொள்ள வேண்டும். இன்றைய சூழலில் வருமான ரீதியாக ஒவ்வொரு பெண்களும் தம்மை வலுப்படுத்திக் கொள்வது மிக அவசியமாகும். வீட்டிலுள்ள பெண்களுக்கு சாதிக்கும் வாய்ப்புகள் மிக அதிகமாகவே காணப்படுகிறது. முதலீடு இன்றி தமது தனிப்பட்ட திறனையும் வாசிப்பு பழக்கத்தையும் திறம்பட செய்வதன் மூலம் தாமும் ஆக்கங்களை வெளியிடலாம். குடும்ப கஷ்டங்களால் முடங்கியுள்ளவர்கள், கல்வியை இடை நிறுத்தியவர்கள் என ஒவ்வொரு பெண்களுக்குள்ளும் ஓர் எழுத்தாளரோ தனிப்பட்ட திறனோ நிச்சயமாக இருக்கும். பெண்கள் அதனை சரியாக இனங்கண்டால் வாழ்வில் தலை நிமிர்ந்து வெற்றி நடை போடலாம்.

நன்றி.




பிரதிலிபி படைப்பாளிகள் திட்டம்

ஸ்ரீ வினிதா நாவல்கள்

பிப்ரவரி 2024 தொடங்கி நடைபெற்ற பிரதிலிபி படைப்பாளிகள் திட்டத்தில் பங்கேற்று 50+ பாகங்கள் கொண்ட தொடர்கதையை பிரதிலிபி தளத்தில் எழுதியமைக்கு உங்களுக்கு பங்கேற்பாளர் சான்றிதழ் வாங்குவதில் நாங்கள் மிகுந்த பெருமை கொள்கிறோம். கதை எழுதுவதில் நீங்கள் காண்பித்த அர்ப்பணிப்பு நிகரில்லாதது.

சான்றளிக்கப்பட்ட பிரதிலிபி படைப்பாளி ஆனதற்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்! ஒரு எழுத்தாளராக நீங்கள் தொடர்ந்து எழுதி உங்களது கற்பனையால் பல வாசகர்களை சென்று சேருவீர்கள் என்று உளமார நம்புகிறோம்.

24/06/24
தேதி

ரஞ்ஜீத் பிரதாப் சிங்
CEO, பிரதிலிபி

## இளம் கலைஞர் அறிமுகம்

# வறுமை கற்றுத் தந்த ஓவியங்களால் வளர்ந்த ஓவியர்

# கவிதாஸ்



அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேசத்தின் இயற்கை எழில் சூழ்ந்த மத்திய முகாம் 4ஆம் கிராமத்தில் பேரின்பராசா மகேஸ்வரி தம்பதிகளின் மகனாக 1994இல் பிறந்தவர்தான் கவிதாஸ். ஏழ்மை நிலையிலும் தனது ஆரம்பக் கல்வியை சது/ வேப்படித்தோட்டம் வாணி மகா வித்தியாலயத்தில் கற்றவருக்கு சிறுவயதில் இருந்தே சித்திரக்கலையில் சுயமான ஆர்வம் மனதில் குடிகொண்டது. பாடசாலையில் கற்கும் போதே தன்னுடைய ஆக்கப்பூர்வமான ஓவியங்களை கிறுக்கிட பாடசாலை மதில்களும், முன்பள்ளி சுவர்களும் இடம் கொடுத்தன.

சின்ன சின்ன ஓவியங்கள்தான் இவரை வெளியுலகிற்கு கொண்டு வர களம் கொடுத்தன. தான் கற்கும் போது பாடசாலையின் அதிபராக இருந்து



கோட்டக்கல்விப் பணிப்பாளராக ஓய்வு பெற்ற சரவணமுத்து அவர்களிடம் பல ஆலோசனைகளைக் கேட்டு தன்னை சித்திரக்கலையிலே வளர்த்தெடுக்க இவரது முயற்சிகள் தொடர்ந்தன. எதிர்காலத்தில் சிறந்த ஓவியனாக வரவேண்டும் என்ற எண்ணக்கருவை மனதில் ஆழமாக பதித்தவர். தனது சாதாரணதர பரீட்சையை முடித்த பிற்பாடு கிடைத்த நேரங்களில் இவர் வெளிவீதியோர மதில்கள், கோவில்கள், வீடுகள் போன்றவற்றில் தனது ஓவியங்களை வரைந்து அதிலிருந்து பெற்ற சிறு ஊதியங்களால் தன் உயர் கல்வியைத் தொடர்ந்தார். சித்திரக் கலையில் இவருக்கு குருவாக இருந்தவர் 11ஆம் கிராம கண்ணகி மகா வித்தியாலய அதிபர் செல்வசிகாமணி அவர்கள்தான். பணத்துக்காய் நேரம் கணித்து கற்றுக் கொடுக்கும் காலத்திலும் அவருடைய பாடசாலையிலே இரவு வேளையில் தங்கி இருந்து கூட படிப்பதற்கும் நேரம் பாராது பயிற்றுவிக்கவும் அவர் கைகொடுத்ததுதான் இன்று நல்லதொரு ஓவியனை கிழக்கு மண் பெற்றிருக்கிறது. தன்னுடைய கல்வியைத் தொடர செலவுக்கான பணம் இல்லை என்ற கவலை மனதில் இருந்த



போதிலும் தன்னுடைய கலை தன்னை கைவிடாது எனத் திடமாக நம்பினார். பகல் வேளைகளில் மட்டுமல்லாது, இரவிலும்கூட நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஓவியங்களை வரைந்து அந்த சிறு பணத்தொகையை வைத்து சிறுக சிறுக சேமித்து உயர்படிப்பினை வாணி மகா வித்தியாலயத்திலேயே வெற்றிகரமாக முடித்தார். உயர் தரத்தில் சித்தியடைந்த அவர், அதிகமாக சித்திரக்கலையில் சிறந்து விளங்க வேண்டும் என்ற எண்ணக்கருவோடு பல்கலைக்கழக விடுமுறை நாட்களில் எல்லாம் ஆலயங்களிலும், வீடுகளுக்கும் வர்ணம் தீட்டி புதிதாக ஓவியங்களை வரைந்து வீடுகளையும் கலை அம்சம் நிறைந்ததாக மாற்றினார். அது மிகவும் வித்தியாசமான முறையில் பலரையும் கவர்ந்ததால் அதுவே அவருக்கு உரிய சுயதொழில் என்பதை இனம்காட்டியது.

கல்லடியில் உள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் அவருடைய தாயாரின் ஆசிர்வாதத்துடன் நுண்கலைமாணி பட்டப்படிப்பினை சித்திரக்கலையிலே நிறைவு செய்தார். ஓவியங்கள் வரைவது எந்த அளவுக்கு பிடிக்குமோ அதேயளவுக்கு தன் கலையை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதிலும் அதிக ஆர்வம் கொண்ட இவர், வெளியில் பல இடங்களிலும் பிரத்தியேக வகுப்புக்கள் மூலமாக 19 மாணவர்களை சித்திரக்கலைக்கு பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியல் கல்லூரிகளிற்கு செல்வதற்கு வழிகாட்டியாக இருந்துள்ளார்.

ஓவியர் என்பதைத் தாண்டி கவிதாஸ் தனது கலையைக் கற்றுக் கொடுக்க ஆழ்மனதில் கொண்ட விருப்பம் இறையாசியுடன் நிறைவேறியது. சப்ரகமுவ மாகாணத்தி-னுடைய இரத்தினபுரி மாவட்டத்தில் நீலகம தமிழ் வித்தியாலயத்தில் சித்திரபாட ஆசிரியராக ஆசிரியர் சேவையில் காலடி வைத்த ஓவியர் கவிதாஸ், சித்திரக்கலை தனது உயிர் மூச்சு என்ற உயரிய எண்ணத்தோடு இன்னும் பல ஓவியங்களுக்கு தனது கைவண்ணத்தில் உயிரூட்டி வருகிறார். சாதிப்பதற்கு வறுமை ஒரு தடையல்ல என்பதை தனது விடாமுயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் நிரூபித்து காட்டியிருக்கிறார் ஓவியர், ஆசிரியர் என பன்முகத் திறமை கொண்ட கலைஞர் கவிதாஸ். ஈழத்தின் சிறந்த படைப்பாளியாக மிளிர வேண்டும் என்ற இவரது கனவு மெய்ப்பட வாழ்த்துவதோடு, இளம் கலைஞராக இவரை அறிமுகப்படுத்துவதில் துணிந்தெழு சஞ்சிகை பெருமை கொள்கிறது.



குலசிங்கம் கிலசன்

# எனது விழிகள்

கருப்பொருள் : கட்டிடக்கலை

இம்மாத சிறந்த புகைப்படம்



எஸ். ஜதுர்ஷன் - நுவரெலியா



ஸைத் அப்துர் ரஹ்மான்
டோக்கியோ, ஜப்பான்



அப்துல் ரஸாக் பவ்சர்
களுத்துறை



பாத்திமா பஸ்னா
தோஹா, கத்தார்



மொஹமட் சிம்சான்
ஓட்டமாவடி

உங்கள் தரமான புகைப்படங்களை
எமக்கு அனுப்பி வையுங்கள்.
+94 75 247 3075

# பேசும் பேனாக்கள்



சென்ற இதழில் அறிமுகம் செய்த நூல்கள் வாசிப்பு பிரியர்களுக்கும் துணிந்தெழு சஞ்சிகையின் வாசக பெருந்தகைகளுக்கும் பெருமளவில் உதவியாக இருந்திருக்கும் என நம்புகிறேன்.

பேசும் பேனாக்கள் பகுதி வாசகர்களுக்கு துணிந்தெழு சஞ்சிகை அமைத்துக் கொடுத்திருக்கும் பெரும் களம் என எடுத்துக்கொண்டதன் விளைவாகவே தொடராக இங்கு நானும் எழுத முனைகிறேன்.

“ஒரு புத்தகத்தைத் திறக்கும்போது உலகினை நோக்கிய ஒரு ஜன்னலைத் திறக்கிறோம்” (தோழர் சிங்காரவேலர்)

இது போன்ற அல்லது இன்னும் பல அறிஞர்களது கூற்றுக்களை மிக உன்னிப்பாக அவதானித்து அதில் உள்ள நீதிக் கருத்துகளை சுவாசித்துக் கொண்ட என்னால் தான் வாசித்த நூல்களை சிற்றறிமுகம் செய்து கொள்வதில் அகம் மகிழ்கிறேன்.

இம்முறையும் சில நூல்களை வாசகர்களாகிய உங்களுக்கு நான் அறிமுகம் செய்கிறேன். நீங்களும் அவைகளை வாசித்து எமது சஞ்சிகையின் விமர்சனப் பகுதிக்கு உங்களின் ஆக்கபூர்வமான விமர்சனங்களை எழுதி அனுப்புவீர்கள் என நம்புகிறேன்.

நீங்களும் உங்களுடைய நூல்களை எமக்கு அனுப்பி அவைகள் பற்றிய சிற்றறிமுகங்களை எதிர்வரும் பேசும் பேனாக்கள் பகுதியில் எதிர்பார்க்கலாம். அது மட்டுமல்லாது உங்கள் புத்தகங்கள் பற்றிய வெளியீட்டு தகவல்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-
துணிந்தெழு சஞ்சிகை, பேசும் பேனாக்கள் பகுதி,
இல 148, வீசி வீதி பெரியநீலாவணை - 02,
மருதமுனை. தொ.பே.இல.0760200387.




01.
நூல் :- வாப்பாக்கு
நூலாசிரியர் :- திக்ரா ஹனிபா
வகை :- கவிதை (கன்னி நூல்)
பதிப்பகம் :- மூதூர் ஜே.எம்.ஐ பப்ளிகேஷன்
உரிமை :- ஆசிரியருக்கு
பக்கம் :- 128
விலை :- 650/= ரூபாய்
வடிவமைப்பு :- ஆயிஷ ஷகிலா உமர்தீன்
வெளியீடு :- 2024 நவம்பர்
பதிப்பு :- தமிழ் நெஞ்சம் அமீன்
பிரதியைப்பெற :- 0778107782



சிந்தனைத்திறன்மிக்க எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் புத்தக வடிவாக்கி கனவை நனவாக்கும் அமைப்பான “ஏட்டுலா கனவாக்கம்”

தனது இரண்டாவது நூலாக கண்டி-தெல்தோட்டை காவிதாயினி திக்ரா ஹனீபா அவர்கள் எழுதிய “வாப்பாக்கு” எனும் நூலை (03.11.2024) காலை 9.00 மணியளவில் கண்டி-தெல்தோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் ஏட்டுலா கனவாக்கம் குழுவினர் வெளியீடு செய்து வைத்தனர்.

பல்வேறு ரீதியான உணர்வுகளைக் கொண்ட கவிதைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பானது நூலாசிரியரது கன்னி நூல் என்பது இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய விடயமாகும். இதில் அவர் வாழ்வியலோடு சம்பந்தமான பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய தலைப்புகளைத் தெரிவு செய்து கவிதைகளை படைத்திருக்கிறார்.

இளம் கவிஞராக இனம்காணப்பட்டு வெளியீடு செய்து வைக்கப்பட்டிருக்கும் இவருடைய நூலை வளர்ந்து வரும் கவிஞர்கள் கவித்துறையில் முன்வரிசையில் இருப்பவர்கள் வாங்கி படித்து அதற்குண்டான பின்னூட்டங்களை அவருக்கு கொடுத்து இன்னும் அவருடைய துறையில் அவர் வளர உதவி செய்ய முன் வர வேண்டும் என்பது எம்மவர்களின் அவா.




02.
நூல் :- மழைச்சாரல் தொடர்கிறது
நூலாசிரியர் :- ஷாக்கிர் கிலுறுத்தீன்
வகை :- கவிதை (கன்னி நூல்)
பதிப்பகம் :- ஹிறா அச்சகம் ஏறாவூர்
உரிமை :- நூலாசிரியருக்கு
பக்கம் :- 112
விலை :- 750/= ரூபாய்
வடிவமைப்பு :- ஏ.எம்.எம். அர்கம்
வெளியீடு :- தோப்பூர் கலை இலக்கியப் பேரவை
பிரதியை பெற :- 0779270920
முதல் பதிப்பு :- 2024 ஜூன்




தோப்பூர் கலை இலக்கியப் பேரவையின் மூன்றாவது பிரதியாக வெளிவருகின்ற இந்த நூல் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளருக்கான களத்தினைக் கொடுத்து அழகு பார்ப்பதில் தனித்துவ தன்மையினை எடுத்தியம்புகின்ற பணியின் ஆரம்ப கட்டம் என்று சொல்லலாம்.

டீ.ஹாஜா முகைடீன் A. D.E அவர்களின் உள்ளூர் ஆளுமை என்னும் நூலைத் தொடர்ந்து (தோப்பூர் மண்ணின் முதல் வரலாற்று நூல்) இலக்கிய படைப்புகளில் மஹ்ஜுத் முஷ்தபா (கிழக்கு வானத்தின்) - கீழ்த்திசைக் காற்று கவிதை நூலை அடுத்ததாக வெளிவருகின்ற இலக்கியப் படைப்பாக சாக்கீர் கிழுறுத்தீன் (நளீமி) எழுதிய “மழைச்சாரல் தொடர்கிறது” என்ற நூலை சொல்ல முடியும்.

ஜாமிஆ நளீமிய்யா உயர் கற்கை நிறுவனத்தில் பட்டம் பெற்று வெளியேறிய இவர், இளம் கவிஞராக வலம் வருகிறார். இவரது பல கவிதைகள் துணிந்தெழு சஞ்சிகையின் மாத இதழ்களில் தொடர்ந்து வெளிவருவது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவரது நூலைப் படிக்கின்ற போது அதில் இடம்பெற்றிருக்கக் கூடிய கவிதைகள் யாவும் சிறிய ரக கவிதைகளாக இருந்தாலும் பொருட்செறிவு மிக்கவையாக இருப்பதை காண முடிகிறது. அத்தோடு, இவருடைய சிந்தனை திறன் வியந்து நம்மை நூலை உற்று நோக்க வைக்கிறது. வித்தியாசமான தலைப்புகளோடு சமூகம், ஆன்மிகம், காதல் உணர்வு, அன்பு போன்ற பல்வேறு தலைப்புகளில் இவரது கவிதைகள் நகர்ந்து செல்வதை அவதானிக்கலாம்.




03.
நூல் :- அனர்த்தங்களும் நாமும்
நூலாசிரியர் :- ராசிக் நபாயிஸ்
வகை :- சமூகவியல்
வெளியீடு :- ஆவணக்காப்பகம் மருதமுனை
உரிமை :- நூலாசிரியருக்கு
பக்கம் :- 126
விலை :- 800/= ரூபாய்
வடிவமைப்பு :- அப்லுக் சுஜாவுதீன்
பிரதியை பெற :- 0772383810
முதல் பதிப்பு :- 2024 ஒக்டோபர்
அச்சுப்பதிப்பு :- மிஸ்டர் லுக், மருதமுனை



சிரேஷ்ட ஊடகவியலாளர், எழுத்தாளர் என பன்முக ஆளுமை மிக்க ஒருவரான மருதமுனையைச் சேர்ந்த ராசிக் நபாயிஸ் அவர்களால் எழுதப்பட்ட சமூகவியல் சார்ந்த அவரது ஆறாவது நூல்தான் "அனர்த்தங்களும் நாமும்" என்னும் பிரதி,

இதில் அனர்த்தங்களின் முன்னாயத்தம், அனர்த்தங்களின் போது, அனர்த்தங்களின் பின்னர் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் அனர்த்தங்களின் போது மக்களாகிய நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விலாவாரியாக அவர் இங்கு குறிப்பிடுகிறார், இவைகளைக் கருத்தில் கொண்டு நூல் நான்கு அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டிருப்பது வாசகர்களுக்கு இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் அமைகிறது.

நூலாசிரியரின் இந்த நூலை விட நூலாசிரியர் சமூகத்தின் பால் எவ்வளவு கவனமாகவும் ஈர்ப்புள்ளவராகவும் இருக்கிறார் என்பதை இந்த நூல் உணர்த்துவதாக நான் வாசிக்கின்ற போது உணர்கிறேன். ஏனெனில், இவருடைய வெளியீடுகள் அனைத்தும் சமூகவியல் சார்ந்தவையைத் தழுவியதாக இருப்பதும் சமூகத்தின் மீது கூடுதல் கரிசனை உள்ளவராக இருப்பதும் அவர் மீதான சமூகத்தின் பார்வையையும் சமூகத்தின் மீது அவருடைய பார்வையையும் இன்னும் அடிக்கோடிட்டு காட்டுவதாக அமைகிறது.

இந்த யுகத்தில் வாழும் நாம் எல்லோரும் கட்டாயம் படிக்க வேண்டிய ஒரு நூல். நூலாசிரியரிடமிருந்து நூலைப் பெற்று நாமும் வாசித்து பயன்பெற்று மற்றவர்களுக்கும் இந்த நூல் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த கடமைப்பட்டுள்ளோம்.




04.
நூல் :- விழுதுகள்
தொகுப்பாசிரியர் :- ஆஷிக் ஹுசைன்
வகை :- கவிதை
தொகுப்பு :- தொகுதி 2
பதிப்பகம் :-ஜே.எம்.ஐ.பப்ளிகேஷன்,மூதூர்.
உரிமை :- என்.ஆஷா பாஸில்
பக்கம் :-112
விலை :- 475/= ரூபாய்
வடிவமைப்பு :- தமிழ் நெஞ்சம் அமீன்
வெளியீடு :-மூதூர் ஒன்லைன் வாசிகசாலை
பதிப்பு :- 2024 செப்டம்பர்
பிரதியை பெற :-
ஜே.எம்.ஐ.பதிப்பகம் மற்றும் மூதூர். ஒன்லைன் வாசிகசாலை.

நூறு கவிஞர்களது 100 கவிதைகளை உள்ளடக்கியதாக வெளிவருகின்ற இரண்டாவது தொகுதி விழுதுகள் எனும் நூல் இதில் எழுதத் துடிக்கும் பல்வேறு இளம் எழுத்தாளர்களது பல்வேறு தலைப்புகளிலான கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த நூலை வாசிக்கின்ற போது ஒவ்வொரு கவிஞர்களது கற்பனைத் திறன்களும் எவ்வாறு இருக்கின்றன என்பதை மிக இலகுவில் புரிந்து கொள்ள முடிகிறது. இப்படியான தொகுதிகளைத் தொகுப்பாக வெளியிடுவதற்கு எல்லோரும் முன்வருவது கிடையாது. ஆகவே, இத்தொகுதி எல்லோர் மனங்களிலும் நிலைத்திருக்கும் என்பது எல்லோரது எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது.

இத்தொகுதியில் சில தலைப்புக்கள் குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டியவை. சிலரது எழுத்துக்களும் அடிக்கோடிட்டு சொல்லப்பட வேண்டியவை. இருப்பினும் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லோருடைய கவிதைகளும் மிக காத்திரமானது மிக ஆழமான சிந்தனை உள்ளது.

நெறிமுறைகளைப் பின்பற்றி எழுதப்பட்டிருக்கும் இந்தத் தொகுப்பானது வாசகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றிருப்பதை சமூக வலைத்தளங்களூடாக காணமுடிகின்றது.

**ஆக்கம் :-**
**எம்.ஜே. ஐவ்சன் அஹமட்**
**துணிந்தெழு சஞ்சிகை**






நூல் விமர்சனம்

# நூல்: இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு

## நினைவுக்கெட்டிய காலம் முதல் சுதந்திரம் வரை

**நூலாசிரியர்:**
*கலாநிதி ரவூப் ஸெய்ன்*

ரவூப் ஸெய்ன் அறிமுகத்துக்கப்பாட்பட்ட ஈழத்தின் இளந்துடிப்பான இஸ்லாமிய பன்முக ஆளுமை, சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், விமர்சகர், ஆய்வாளர், அவதானி.

அவரது 54 ஆம் நூலிது. வரலாற்றுணர்வும் துடிப்பும் மிக்கவர். தீராத ஆழ் தேடலும் அகலித்த வாசிப்பும் பரந்த ஆய்வு மனப்பாங்கும் அவரை செதுக்கி வந்துள்ளன.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அவரது எழுத்துக்களைப் பருகி வருகிறேன். அதன் செழுமை வளம் பெறுகிறதே தவிர, தொய்வடைவதில்லை. அந்தளவு ஆக்ரோசமும் ஆகர்ஷணமும் ஒரு சேர வரமாய்ப் பெற்ற எழுத்து அவருக்கு வாய்த்துள்ளது. அவரது எழுத்தின் நீண்ட நாள் வாசகன். அவரது எழுத்துக்களால் வளம் பெற்று வந்தவன். அவரது எழுத்துக்களில் ஒற்றைப் படுத்தல் துல்லியமாக உள்ளது.

நூலின் தலைப்புக் கூட வாசகரை நூல் மீது பற்றுக்கொள்ள வைத்து அந்த நினைவுக்கெட்டிய காலம் எது வரை? என தேடத் தூண்டுகிறது.

நூலைத்திறந்தால் தெவிட்டாத வகையில் அவரது முடிவற்ற தேடலை அது பறைசாற்றுகிறது. ரவூப் ஸெய்னிடம் எனக்கு பிடித்தது அவரது நா நுனியில் உள்ள updated Data and Refferencing style தான்.

20 ஆண்டுகள் கொண்ட நீண்ட வரலாற்றுத்தேடலின் அறுவடை தான் இது. ஒரு பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய பணியை தனியாளாக நின்று தரமாக நிரந்தர தர்மமாக ஆக்கி இலங்கை முஸ்லிம்கள் மீதிருந்த சுமையை இறக்கி தளர்த்தி தணித்து இருப்பையும் பூர்வீகத்தையும் தொன்மையையும் நிறுவி ஸ்திரமான சரித்திரமற்ற வந்தேறு குடிகளெனும் அபகீர்த்தி நாமத்தை பூண்டோடகற்றி வரலாற்றுச்சிறப்பும் தொன்மையும் பூர்வீகமும் பூரண உரிமையும் கொண்ட நாட்டின் அபிவிருத்தி, வளர்ச்சி, பாதுகாப்பு, இறைமை போன்றவற்றைக் கட்டிக்காத்த தேசத்தின் பிரதான குடிகளாக அடையாளம் காட்டுகிறார்.

மன்னர்களை நம்பி நாணயமாக நடக்கும் வகையில் உயர் அந்தஸ்த்துடன் வாழ்ந்தவர்கள். மகிமையும் பேறும் பெற்று நாட்டை சுரண்டாது செழிப்பூட்டியவர்கள். வளமாக்கியவர்கள். நாட்டுக்காக சேவையாற்றிய செம்மல்களாகவே முஸ்லிம்களின் வரலாறு நெடுகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னட்டை முதல் பின்னட்டை வரை அது படர்ந்தோடி விடுகிறது. காலை வெயில் இருளைக்கீறிக்கிழித்து உஷ்ணத்துடன் ஒளியூட்டுவது போல நூல் சகலரையும் ஈர்க்கிறது. தேடலை இரட்டிப்பாக்கிறது. பெருமித உணர்வைத்தருகிறது. வரலாற்றின் சுவையை வற்றாமல் அள்ளிப் பருகச்செய்கிறது. வரலாறற்றவர்கள் எனும் வசை பாடலுக்கு நெற்றியடியாக அமைகிறது. இது ஒட்டு மொத்த சமுகத்தின் அவலத்துக்கான அருமருந்தாக உள்ளது. இளந்தலைமுறைக்கு புதுத்தெம்பூட்டி புத்துணர்வளிக்கிறது

நூல் மொத்தமாக 6 அத்தியாயங்களைக் கொண்டது.

முதல் அத்தியாயம் இலங்கை முஸ்லிம்களின் தொன்மை மிக்க வரலாறு பற்றியது. கடலை நோக்கி நீளும் பெரு நதி போல இது முன்னோக்கி நீள்கிறது. அடுத்து இலங்கை முஸ்லிம்களின் பொருளாதரத்துறை பங்களிப்பு உலக வரலாற்றிலும் இலங்கை வரலாற்றிலும் வந்தேறு குடிகளாக தற்செயலாக வந்திறங்கிய முக்கூட்டு காலனிய ஆக்கிரமிப்பாளர்களும் அடாவடித்தனமும் அட்டூழியமும் புரிந்து வளமான நாட்டை சுரண்டிப்பிழைத்து உறிஞ்ச வந்த வேளை தேச நலனுக்காக ஊழியம் செய்த உண்மையான தேசபக்தர்களாக முஸ்லிம்களை அடையாளங் காட்டுவதாக இது உள்ளது.

இது தான் உண்மையும் கூட. தவளம் போக்குவரத்து விவசாயம் நெற்செய்கை, கோப்பி கருவா, மாணிக்கம் என நீண்டு முத்து, மற்றும் நெசவுத்துறையிலும் கொடி கட்டிப்பறந்து நாட்டின் பொருளாதாரத்தை அதன் கீர்த்தி நாமத்தை கட்டிக் காத்தவர்களும் உலகறியச்செய்தவர்களும் எமது முன்னைய முஸ்லிம்களே!

அடுத்து தேசிய இறைமை மற்றும் பாதுகாப்பு துறையில் அநுராதபுர காலம் தொட்டு பிரித்தானியர் வரையான நீண்ட வரலாற்றுப் பங்களிப்பை அடுத்து வரும் பங்கங்களை ஊடறுத்து முன்வைத்து எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறார். அத்தனைக்கும் அடுக்கடுக்கான ஆதாரங்களை சான்றுகளை அள்ளி வீசி எம்மை மளைப்பில் ஆழ்த்துகிறார்.

அடுத்து அரசியல் பங்கேற்பும் பங்களிப்பும்..

மன்னர்களது வரலாற்றுக் காலத்தில் இருந்த இலங்கை

முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்பு சுதந்திரத்திற்கு பின்னர் இவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதும் கேள்விக்குறியே. அது படிப்படியாக இடையில் கைவிடப்பட்டு தனித்தனி அரசியல் கட்சிகளாக உருவெடுத்து மெயின் பின்புலம் குறித்தும் நாம் அலசி ஆராய வேண்டும். எதிர்காலத்தில் உதிரிகளாகச் சென்று விடாமல் ஒட்டுமொத்த அரசியல் விடுவை நோக்கி நாம் ஒன்று பட வேண்டும் என்ற கருத்தையும் நோக்கி எமது கவனம் குவிய வேண்டும்.

அநுராதபுர காலம் முதல் சுதந்திரம் வரையான காலப்பகுதிகளில் முஸ்லிம்களின் மகத்தான பங்கேற்பும் பணிகளும் பங்களிப்பும் குறித்த விரிவான அலசலாக அமையும் பகுதியை காணலாம்.

அடுத்த 5 ஆம் பகுதி இலங்கை முஸ்லிம்களின் மருத்துவத் துறைப்பங்களிப்பு குறித்த அரிய தகவல்களைக் காணலாம். யூனானி மருத்துவ பாரம்பரியத்தின் தோற்றுவாய் தொடங்கி தம்பதெனிய கண்டி ராசதானி காலம் முதல் ஐரோப்பிய காலம் வரையான பங்களிப்பை ஆழமாக, அகலமாக அடிமனதை தொடும் வகையில் அலசுகிறார்.

இறுதியாக சமய கலாசார துறையில் இலங்கை முஸ்லிம்களின் பங்கேற்பும் பங்களிப்பும் குறித்து பேசுகிறார். கட்டடக்கலை, ஆடை ஆபரணங்கள், பௌத்த சமய கலாசார வளர்ச்சியில் முஸ்லிம்களின் பங்கேற்பு, பங்களிப்பு, விகாரைகளுடனான முஸ்லிம் உறவு, தலதா மாளிகையும் முஸ்லிம்களும், எசல பெரஹரவும் முஸ்லிம்களும், தேவாலயங்களில் முஸ்லிம் பங்களிப்பு, தானங்கள், மத ஆலயங்களை புனரமைப்பதில் முஸ்லிம்களின் பங்களிப்பு, முஸ்லிம் யானை பணிக்கர்களும் பங்களிப்பும் என நீள்கிறது.

இதுவரை வெளியான இலங்கை முஸ்லிம்கள் குறித்த நூல்களின் நீட்சியாகவும் செறிவான ஆவணவாக்கலாகவும் அரிய தகவல்கள் நிரம்பிய இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுக் கலைக் களஞ்சியமாகவும் கருத முடியும்.

பிரபல ஊடகவியலாளரும் பன்னூலாசிரியருமான லத்தீப் பாரூக் அவர்கள் சீரியசான சிறந்த அணிந்துரை ஒன்றை வழங்கியுள்ளார்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுத் தொன்மை இங்கும் பேசப்பட்டுள்ளதை காணலாம். இலங்கை முஸ்லிம்களின் தொன்மை மிக்க வரலாற்று பக்கங்களை மீட்டிப் பார்த்தால் இந்த உண்மைகளை உணரலாம்.

நூலை புரியவும் ஜீரணிக்கவும் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று எழுதுகையின் கடந்த கால பக்கங்களை புரட்டிப் பார்க்க கடமைப்பட்டுள்ளோம். உலக வரலாற்றில் இலங்கை எப்படி காலத்தால் முந்தியதோ, வரலாற்று பாரம்பரியம் மற்றும் பழைமை வாய்ந்ததோ அதே போலத்தான் இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் காலத்தால் முந்தியது. அதே நேரம் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று இருப்பை சிதைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளும் பழைமையானவை. காலத்தால் முந்தியவை. காலனியம் என்ற பெயரில் உலகெங்கும் ஊடுருவிய மேற்கத்தியர்கள் உள்ளூர் முஸ்லிம்களை எதிர்ப்பதையே பகீரத பிரயத்தனமாக கொண்டிருந்த வேளையில் தான் போர்த்துக்கேயர்கள் இலங்கையில் உட்புகுந்து விடுகின்றனர்.

போர்த்துக்கேய கடற்பயணியான வஸ்கோடகமா கிழக்காபிரிக்காவில் இருந்து தன் பயணத்தை ஆரம்பித்து தென்னிந்தியாவின் கள்ளிக்கோட்டையை அடைய கடற்பயணங்கள் மற்றும் கடற்பாதைகள் குறித்த துல்லியமான அறிவுப்புலமையும் அனுபவமும் கொண்ட இப்னு மாஜித் எனப்படும் புகழ்பெற்ற முஸ்லிம் மாலுமியே காரணமாக அமைந்தார்.

இவர் “அலதுல் பஹ்ர்” கடற்சிங்கம் எனப்பட்டார். இவரது “கிதாபுல் பவாஇத்” எனப்படும் கடலனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட வழிகாட்டி நூலாக அமைந்தது. செங்கடல் மற்றும் இந்து சமுத்திர கடற் பாதைகளுக்கிடையில் பயணிக்கும் நுன்புலங்களை விளக்குவதாக இந்நூல் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில் இந்து சமுத்திரத்தில் நுழைந்து அத்துமீறலையும் அடக்கு முறைகளையும் கட்டவிழ்த்த போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பு மற்றும் சுரண்டல் குணங்கள் காரணமாக கடற் பயண வழிகாட்டல் நூலை வழங்கியமையை இட்டு மிகவுமே நொந்து போனார்.

எப்படியோ முஸ்லிம் மாலுமி மூலம் வழிகாட்டலைப் பெற்று முஸ்லிம்களையே அழித்தொழிக்கும் நாசகார செயல்களையே அவர்கள் நோக்காகக் கொண்டனர். முஸ்லிம்களின் கையில் இருந்த வணிகத்தை கைப்பற்ற கரிசனை செலுத்தினர். காலப்போக்கில் இலங்கை வாழ் ஒரே மொழி பேசும் இதர சிறுபான்மை தலைவர்களும் கூட முஸ்லிம்களின் இருப்பை இனத்துவத்தை பூர்வீகத்தை அங்கீகரிக்கவோ ஜீரணிக்கவோ தயாரற்று இருந்தனர்.

இந்தப் பின்னணியில் தான் 1833 களில் நிறுவப்பட்ட சட்ட நிரூபண சபையில் அதற்கான அங்கத்தவர்கள் இனத்துவ அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் முஸ்லிம்களின் தனித்துவம் இங்கு கருத்தில் கொள்ளப்படவில்லை. தமிழ் இனம் சார்பாக நியமிக்கப்பட்ட உத்தியோகப்பட்டற்ற தமிழ் இன பிரதிநிதியே தற்காலிகமாக முஸ்லிம் இனத்தையும் பிரதி நிதித்துவம் செய்தது. முஸ்லிம்களும் தமிழை தாய் மொழியாக பேசியது காரணமாக இருந்திருக்கலாம். கால ஓட்டத்தில் 1880 களில் சட்ட சபையில் சிற்சில மாற்றங்கள் உருவான போது முஸ்லிம்கள் தமது உரிமைக்கான குரலை அழுத்தமாக முன்வைக்க முயன்றனர். கோரிக்கை விடுத்தனர். இச்சந்தர்ப்பத்தில் தான் பொன்னம்பலம் ராமநாதன் அவர்கள் “முஸ்லிம்கள் இஸ்லாத்தை தழுவிய திராவிடர்கள் என்றும் அவர்களின் பூர்வீகம் தென்னிந்தியா என்றும் இனத்தால் தமிழர்கள்” என்றும் ஒரு வாதத்தை முன்வைத்தார். முஸ்லிம்களை தமிழ் தலைமைக்கு கீழால்

வரலாறு நெடுகவும் இருக்க வைக்க மறைமுக ஏற்பாடாகவே இது நோக்கப்பட்டது. The Ethnology Of Moors Of Ceylon எனும் தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார்.

முஸ்லிம்களை வந்தேறு குடிகளாக சித்தரிக்க முயன்ற இந்த தரக்குறைவான வரலாற்று இருட்டடிப்பையும் துரோகத்தையும் தோலுரித்து உண்மையை வெளிக்காட்டும் வகையில் முஸ்லிம்களின் இருப்பை உறுதி செய்ததோடு, ராமனாதனின் வாதத்தை மறுத்து இலங்கை முஸ்லிம்கள் இனத்தால் அரபிகள் பூர்வீக குடிகள், எனும் கருத்தை நிறுவி A CRITISM OF Mr Ramanaathan's Ethnology Of Moors Of Ceylon எனும் விமர்சன ஆய்வு நூலை வெளியிட்டு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று தொன்மைக்கான பாதையை வரைய அடித்தளமிட்டு ஆரம்பித்து வைத்த பெருமை மர்ஹூம் ஐ.எல். எம். அப்துல் அசீஸையே சாரும்.

அதன் தொடரில் கலாநிதி மர்ஹூம் சுக்ரி தலைமையில் வரலாற்று துறை ஆய்வாளர்கள் பலரும் இணைந்து குறிப்பாக பேராசிரியர் கே.எம்.டி.சில்வா அவர்களது ஆலோசனையில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொகுக்கப்பட்டது.

அதே நேரம் மர்ஹூம் ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்கள் இலங்கை முஸ்லிம்களின் வணிகம் சமூகவியல் பண்பாடு சடங்கு சம்பிரதாயங்கள் போன்றவற்றின் விலாவாரியான முழுமையான பணியை எதிர்கால சமூகத்திடம் விட்டுச்சென்றார். அந்த காத்திரமான பணியை அண்மைக்காலத்தில் இளம் ஊடகவியலாளர் எழுத்தாளர் ஆய்வாளர் ஆஸிப் ஹுசைன் அவர்கள் தொடர்ந்தும் முன்கொண்டு செல்கின்றார். அதேபோல கலாநிதி ரவூப் ஸெய்ன் அவர்களும் இது தொடர்பில் காத்திரமான ஆய்வுகளையும் நூல்களையும் இதற்கு முன்னரும் எழுதியுள்ளார்.

இலங்கை முஸ்லிம்களின் தொன்மையான வரலாற்றை மிக ஆழமாக தேடி வாசித்து ஆய்வு செய்ய வேண்டிய அதே நேரம் இந்த வரலாற்று எழுதுகை குறித்த வரலாற்றையும் நன்றியுடன் நினைவு கூர்வது வரலாற்றுணர்வு சார்ந்த அம்சமாகும்.

இலங்கை முஸ்லிம்கள் வரலாரற்றவர்கள் என்பதை மறுத்து பூர்வீகமும் வரலாற்று பாரம்பரியங்களும் பண்பாடும் கொண்டவர்கள் என்பதை முதலில் எமது சமூகத்தின் வளரிளம் தலைமைகள் அறிந்து கொள்வது காலத்தின் கட்டாய கடமையாகும்.

அந்தவகையில் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரிக்கு அடுத்து கனங்காத்திரமான மிகச்செறிவான வரலாற்றுப் பெரும் பணியை கலாநிதி ரவூப் ஸெய்ன் ஆற்றி உள்ளமை சமூகத்துக்கு கிடைத்த வரம் எனலாம். இனி வரும் காலங்களில் அவரது வரலாற்று எழுத்தியலுக்கு சமுகம் போதிய கரிசனையும் உதவி ஒத்துழைப்பும் வழங்க வேண்டியதும் இலங்கை வாழ் முஸ்லிம்களின் தார்மீகப் பணியாகும்.

நூலாசிரியருக்கு வாழ்த்துக்கள் பிரார்த்தனைகள் தொடர்ந்தும் இத்தகைய உயர் பங்களிப்புகளை நல்க இறைவன் அருள வேண்டும் நேரத்தில் விருத்தி ஏற்படுத்த வேண்டும்.

நூல் வெகு விரைவில் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வர வேண்டும். நூல் குறித்த வாசிப்புகள், குறிப்புரைகள், விமர்சனங்கள் பரவலாக்கப்பட வேண்டும்.

**எம்.எம்.ஏ. பிஸ்தமி**





# ஹிரிகெட்டிய கடற்கரை

இலங்கை தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 194 கிலோமீட்டர் தூரத்தில் ஹிரிகெட்டிய கடற்கரை அமைந்துள்ளது.

தென் இலங்கையில் உள்ள மாத்தறை மாவட்டத்தில் இருந்து சுமார் 22 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள மற்றொரு அழகிய கடற்கரைத் தீவாக இதனைக் குறிப்பிடலாம். இந்தக் கடற்கரை மிரிஸ்ஸ கடற்கரையிலிருந்து ஒரு மணிநேர பயணம் செய்யும் தூரத்தில் உள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியிலயே இக்கடற்கரை பிரபலமடைந்தது. அதற்கு முன்னர் அப்பிரதேச மக்கள் தென்னை மரத்தின் மட்டைகளை நீரில் ஊறவைத்தல் போன்ற கைத்தொழில்களில் ஈடுபட்டதனால் கடல் சார்ந்த சூழல்கள் மாசுபட்டுக் காணப்பட்டன.

அதற்குப் பிற்பாடு 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் சில அவுஸ்திரேலியர்கள் ஹிரிகெட்டிய கடற்கரையைக் கண்டுபிடித்தனர். கிராம மக்கள்



எப்பொழுதும் அச்சம் கொள்ளும் திறந்த கடலில் அவர்கள் துணிச்சலாக நீந்துவதைக் கண்டு அக்கிராம மக்கள் வியப்படைந்தனர். கடற்கரையின் நடுப்பகுதியில் இருந்து கடலுக்குள் செல்பவர்கள் உயிரிழக்கும் அபாயம் உள்ளதாகவும், ஒவ்வொரு ஆண்டும் கடலின் திறந்த பகுதியில் நீந்தத் துணியும் ஒருவரின் உயிரை கடல் பறிக்கும் என்றும் ஹிரிகெட்டிய நாட்டுப்புறக் கதைகள் கூறுகின்றன என்று அம்மக்கள் அதை நம்பினர்.

நாங்கள் இளைஞர்களாக இருந்தபோது, திறந்த கடற்கரையில் நீந்த வேண்டாம் என்று எங்கள் பெற்றோர் கடுமையாக

அறிவுறுத்தினர். நாங்கள் கடற்கரையின் இரண்டு முனைகளில் நீந்தினோம், அது பாதுகாப்பு ரீ்.ப் தடையை கொண்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடலில் நீந்திக் கொண்டிருந்ததால், விபத்து எதுவும் ஏற்படவில்லை. ஹிரிகெட்டிய கடற்கரைக்கு வெளிநாட்டுப் பார்வையாளர்கள் அதிவேகமாக வருகை தந்ததால் அக்கால மக்கள் வைத்திருந்த கட்டுக் கதைகள் எல்லாம் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி காரணமாக மாறுபடக் காரணமாகியது.

இலங்கையை கடற்கரைப் பிரியர்களின் சொர்க்கம் என்றும் இலங்கையின் மறைக்கப்பட்ட ரத்தினம் என்றும் இந்த இடம் உள்ளூர் மக்களால் பரிந்துரைக்கப்பட்டதைக் குறிப்பிடலாம். குறிப்பாக இக்கடற்கரை மிகவும் சுத்தமாகவும், தண்ணீர் மிகவும் தெளிவாகவும் காணப்படுகின்ற ஒரு சிறிய கடற்கரைத் தீவாகும்.

குறிப்பாக அழகிய பாறைகள் நீருக்குள் வேரூன்றிக் காணப்படுகின்றன. மீன்கள் மற்றும் ஆமைகள் நீந்துவதை இலகுவாக இங்கே அவதானிக்க முடியும். இதனால் சுற்றுலாப் பயணிகள் இல்லையென்ற ஆனந்தம் அடைகின்றனர்.

ஹிரிகெட்டிய கடற்கரை இலங்கையில் உள்ள மிக அழகான கடற்கரைகளில் ஒன்றாகும். அழகாகப் பிரிக்கப்பட்ட அனைத்து கடல் அடுக்குகளையும் இங்கே காணமுடியும்.

அதேபோல் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தக் கடற்கரைக்கு வருகை தருகின்றார்கள். அதுவும் குறிப்பாக வெளிநாட்டவர்களை இங்கு அதிகமாக அவதானிக்க முடியும். சர்.்.பிங் (Surfing-அலை சறுக்கு விளையாட்டு) கற்றுக்கொள்வதற்கு இது ஒரு சிறந்த இடமாக இலங்கையில் காணப்படுகிறது. அதனாலயே அதிக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றார்கள். அதே போல் மிதமான அலைகளும் ஆழமற்ற பகுதிகளும் இங்கே காணப்படுகின்றன. அதனால் சுற்றுலாப் பயணிகள் உட்பட அனைத்து தரப்பினரும் இங்கு உற்சாகமாக நீராடுகின்றார்கள்.

மணல்கள் நிறைந்த கடற்கரையின் நீண்ட கீற்றுகள், ஒரு திசையில் அடர்த்தியான பனை மரத் தழைகளாலும், மறுபுறம் படிகத் தெளிவான நீரால் சூழப்பட்டுள்ளன. கடற்கரைகள் மிகவும் குறுகியவை, அதிகாலையில் உதயமாகும் சூரியனை பார்த்த படியே இங்கே அநேக சுற்றுலாப் பயணிகள் சூரிய குளியலில் ஈடுபடுவதையும் அவதானிக்க முடியும்.



ஹிரிகெட்டிய என்பது இலங்கையின் கீழ் வளைவில் மிகவும் மையமாக அமைந்துள்ள ஒரு குதிரைவாலி விரிகுடா ஆகும். ஹிரிகெட்டிய என்பது சர்வதேச சுற்றுலாப் பயணிகளிடையே சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இடமாகக் குறிப்பிட முடியும். ஆனால், கடற்கரையானது வெகுஜன சுற்றுலாவினால் இன்னும் முழுமையாக மாற்றப்படவில்லை. அதனாலயே இன்னும் ஓர் உண்மையான கடற்கரை கிராம சூழ்நிலையைக் கொண்டுள்ளது. ஜூன் மாதத்தில் பருவமழைக் காலத்தில், சில அலைகளைப் பிடிக்க சர்ஃபர்கள் துடுப்பெடுத்தாடும் அழகிய காட்சிகளையும் இங்கு அவதானிக்க முடியும்.

கடற்கரையின் இடது புறம் பவளம் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் நிறைந்த ஆழமற்ற நீரில் ஸ்நோர்கெல் செய்து மேலும் கடலில் உள்ள பவளப்பாறைகள் உயிரினங்களை அவதானிக்க முடியும். அது சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் உற்சாகமளிக்கிறது.

மேலும் கடற்கரையின் மையத்தில், பவளப்பாறைகள் குறைவாக இருப்பதால், அலைகளில் நீந்தவும் விளையாடவும் மிகவும் பாதுகாப்பானதாகக் காணப்படுகிறது.

நீங்கள் விரும்பினால் கடற்கரையோர உணவகத்தில் கட்டப்பட்டிருக்கும் காம்பால்(தொட்டிலில்) ஒன்றில் கடலின் அலை மோதுவதைப் போல, பனை மரங்களின் நிழலிலிலும் அமர்ந்து கடலை ரசிக்க மற்றும் படிக்கவும் முடியும். நீங்கள் என்ன செய்தாலும் ஒவ்வொரு இரவிலும் அலைகள் வாட்டர்கலர் ஓவியமாக மாறும் வெளிர் வண்ணங்களின் காட்சியைக் காண அந்தி வேளைகளில் தவறவிடாதீர்கள்.

ஹிரிகெட்டிய கடற்கரையை ஒருமுறையாவது நீங்கள் பார்வையிட வேண்டும். இந்த இடம் உங்களை அதிகம் நேசிக்க வைக்கும்! இது பார்த்தாலே தெரியும். உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் தவறவிடாமல் சென்று இயற்கையை தரிசித்து விட்டு வாருங்கள்.



எஸ்.எம்.எம்.நிப்ராஸ் (JP)
ஊடகவியலாளர்

# சிறுவர் துஷ்பிரயோகமும் அதற்கான தீர்வுகளும்

இன்று உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் காரணிகளில் சிறுவர் துஷ்பிரயோகமும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆசிய நாடுகளில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. ஒரு சில மனோ இச்சையாளர்களின் செயற்பாடுகளினால் அப்பாவி சிறார்களும் கல்வி பயிலும் வாலிபர்களும் துஷ்பிரயோகிக்கப்படுகின்றனர். இவை பல வடிவங்களில் அரங்கேற்றப்படுகின்றன. உடல், உள ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், புறக்கணிப்பு ரீதியிலான துஷ்பிரயோகம் என பல்வேறு கோணங்களில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர். இது பற்றி நாம் ஒரு சட்டத்தரணியை அனுகி சில தெளிவுகளைப் பெற்றுக் கொண்டோம்.

இதோ சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தமாக கேள்விகளும் பதில்களும்

**கேள்வி:**

**இன்று எங்கு நோக்கினும் பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்கள் துஷ்பிரயோகம் பாரிய அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. முன்னைய காலங்களை விட தற்பொழுது இவ்விதமான துஷ்பிரயோகங்கள் அதிகரிக்கக் காரணங்கள் என்ன?**

**பதில்:**

நிதிச் சிக்கல்களால், பெற்றோர்கள் வெளிநாடு செல்வதால், குழந்தைகள் பாதுகாப்பாக இல்லை. அத்தோடு, சமூக அழுத்தங்கள் காரணமாக பலருக்கு உளவியல் பிரச்சினைகள் உள்ளன, எனவே, அவர்கள் தங்கள் ஆசைகளைச் சட்ட விரோதமான முறையில் நிறைவேற்ற முயற்சி செய்கிறார்கள்.

பெரும்பாலும் துஷ்பிரயோகங்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்லது அண்டை வீட்டாரால் செய்யப்படுகின்றன. குழந்தைகளைத் தெரியாத ஆண் நபர்களிடம் பெற்றோர் விட்டுச்செல்வது.

பிஸியான வாழ்க்கை மற்றும் சமூக ஊடகங்கள் காரணமாக, பெற்றோர்கள் பிஸியான வாழ்க்கையை வாழ்கின்றனர். எனவே, குழந்தைகள் பெற்றோருடன் அன்பான அரவணைப்பில் இல்லை. மேலும் இந்த காரணத்தால் துஷ்பிரயோகங்கள் பற்றி அவர்கள் பெற்றோருடன் கூறத்தயங்குகின்றனர்.

நம் நாட்டில் குழந்தைகளுக்கு கெட்ட தொடுதல் மற்றும் நல்ல தொடுதல் பற்றி கற்பிக்கப்படுவதில்லை. சிறிய விஷயங்களுக்காக குழந்தைகள் தனியாக வெளியே அனுப்பப்படுகிறார்கள்.
Eg- அருகில் உள்ள கடைகளில் அன்றாட பொருட்கள் வாங்குவதற்காக.

சமூக ஊடகங்களில் அதிகமாக பொருத்தமற்ற பக்கங்களைப் பார்த்தல்.

ஒழுக்கமில்லாத ஆடைகளை அணிவிப்பதன் மூலம் ஆண்கள் கவரப்படுகின்றனர்.

போட்டி நிறைந்த கல்வி முறைகளால், குழந்தைகள் சமூகத்தைப் பற்றி அறியாமல் உள்ளனர். குழந்தைகளுக்கு சரியான கல்விகளும் வழங்கப்படுவதில்லை.

கைத்தொலைபேசியில் நவீன தொழில் நுட்பத்தின் மூலம் பார்க்கப்படும் தேவையற்ற சினிமாக்கள், காட்சிகள். இவை அவர்களுடைய உணர்வுகளை தூண்டக்கூடியவாறு உள்ளன.

**கேள்வி:**

**பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் சிறுவர் சிறுமியர்களின் பெற்றோர்கள் இதனை அறிந்தும் சிலர் சமூகத்திற்குப் பயந்து அதனை மறைத்து விடுகின்றனர். இதற்காக அவர்கள் எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகள் என்ன? உங்கள் பதில் இன்றைய சமூகத்தில் உள்ள பெற்றோர்களுக்கு விழிப்புணர்வாக இருக்கட்டும்.**

**பதில்**

கூடிய விரைவில் பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பிற்காக பொலிஸாரின் – 0112444444 (ஹாட்லைன்) அல்லது அவசர எண் 1929 (உதவி எண்) ஐ தொடர்பு கொள்ளவும்.

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையகத்தில் புகார் அளிக்கவும்.

எழுதப்பட்ட வடிவத்தில் முடிந்தவரை சுற்றியுள்ளவர்களிடம் இருந்து ஆதாரங்களை சேகரிக்க முயற்சிக்கவும்.

சிசிடிவி காட்சிகளைப் பெற்று 2 நாட்களுக்குள் சேமித்தால் நல்லது, ஏன் எனில் சிலவை அழிக்கப்படலாம். சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான வழிகள்:

1. துஷ்பிரயோகம் பற்றி குழந்தைகளுக்கு கற்றுக்கொடுங்கள்.

துஷ்பிரயோகம் பற்றிப் பேசுங்கள், குழந்தைகளுக்கு அவர்களின் உடல்களைப் பற்றிக் கற்றுக்கொடுங்கள். மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்தைப் பற்றி விவாதிக்க அன்றாட வாய்ப்புகளைப் பயன்படுத்துங்கள்.

2. குழந்தைகளுக்கு பாதுகாப்பாக இருக்க கற்றுக்கொடுங்கள்.

அறிமுகமில்லாதவர்களிடம் பேசுவதைத் தவிர்க்கும்படி குழந்தைகளுக்குச் சொல்லுங்கள், அந்நியர்களுடன் ஒருபோதும் அனுப்பாதீர்கள். அந்நியர் அணுகினால் எப்போதும் விலகியிருக்க சொல்லுங்கள்.

3. துஷ்பிரயோகத்தின் அறிகுறிகளைக் கற்றுக்கொடுங்கள்.

பாலியல் துஷ்பிரயோகத்தின் உடல் அறிகுறிகளை நீங்கள் சந்தேகித்தால், குழந்தையை உடனடியாக ஒரு வைத்திய நிபுணரிடம் பரிசோதிக்கவும்.

4.பாதுகாப்பான சூழலை உருவாக்கவும்.

குழந்தைகள் கண்காணிக்கப்படும் பாதுகாப்பான இடங்கள் அல்லது சுற்றுப்புறச் செயற்பாடுகளை உருவாக்கவும்.

குழந்தைகளுடன் நேரடியாகப் பணிபுரியும் அனைத்து தன்னார்வலர்கள் மற்றும் அவர்களின் பின்னணிகளை அறிந்து வைக்கவும்.

7. தண்டனைகளை ஊக்கப்படுத்துங்கள். இவ்வினச் செயலை செய்பவர்களுக்கு பகிரங்க தண்டனை வழங்குதல்.

**கேள்வி**

**சட்டத்தின் முன் இன்றைய இப்பாலியல் துன்புறுத்தல்களுக்கு காரண கர்த்தாவாக இருப்பவர்களுக்குறிய தண்டனைகள் என்ன? இது பற்றி சற்று விளக்குவீர்களா?**

பதில்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான இலங்கை தண்டனைச் சட்டத்தின் சில பிரிவுகள் இங்கே:

1. பிரிவு 308A

தண்டனைச் சட்டம் (திருத்தம்) சட்டத்தின் (1995 எண். 22) இந்தப் பிரிவு, 18 வயதுக்குட்பட்ட குழந்தையை வேண்டுமென்றே தாக்குவது, தவறாக நடத்துவது, புறக்கணிப்பது அல்லது கைவிடுவது போன்ற செயல்களை குழந்தைகளுக்குக் கொடுமையாக வரையறுக்கிறது.

இந்தக் குற்றத்திற்கான தண்டனை குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் மற்றும் அதிகபட்சம் பத்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, அபராதம் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு.

2. பிரிவு 286C

குற்றவியல் கோட் (திருத்தம்) சட்டத்தின் (2006 எண். 16) இந்தப் பிரிவு, தாங்கள் பொறுப்பேற்றுள்ள வளாகங்கள் ஒரு "குழந்தை துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பதை அறிந்தால், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும்" என்று கூறுகிறது.

அவ்வாறு செய்யத் தவறினால் சிறைத்தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

3. பிரிவு 365

இலங்கை தண்டனைச் சட்டத்தின் இந்த கட்டுரை "இயற்கையின் ஒழுங்குக்கு எதிரான உடலுறவு" குற்றமாக கருதுகிறது மற்றும் பத்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

**கேள்வி**

**ஒரு சட்டத்தரணியாக இப்பிரச்சனை சம்பந்தமான வீட்டுச்சூழலில் எடுக்க வேண்டிய காரணிகள் எவை? இதன் மூலம் சமூகத்தில் உள்ள எமது பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வாக இருக்கும் என நம்புகிறோம்.**

பதில்

சில நகரப் பகுதி சேரிகளில், சொந்த வீட்டில் கழிப்பறைகள் இல்லாத பொதுக் கழிப்பறையைப் பயன்படுத்தினால் அதிக எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருக்க வேண்டும். அக்கம்பக்கத்தினர் குழந்தைகளை மிக எளிதாக துஷ்பிரயோகம் செய்யலாம்.

பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, குழந்தைகளை தனியாக கடைகளுக்கு அனுப்பக்கூடாது. கடை உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் குழந்தைகளுடன் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பது பற்றி உங்களுக்குத் தெரியாது. அவர்கள் பாக்கிப் பணத்தை எடுக்கும்போது அது ஒரு மோசமான தொடுதலாக இருக்கலாம்.

பொது போக்குவரத்தில் குழந்தைகளை எப்போதும் பாதுகாக்கவும்.

குழந்தையை வீட்டில் தனியாக விடாதீர்கள். யாரையும் நம்பாதீர்கள். அது உங்கள் சொந்த சகோதரனாகவோ அல்லது சொந்த மகனாகவோ இருக்கலாம். உங்கள் குழந்தையின் பொருத்தமற்ற வீடியோக்களை யார் வேண்டுமானாலும் எடுத்து வெளியிடலாம்.

இது பெரும்பாலும் பெண் குழந்தைகளைப் பற்றி பேசப்படுகிறது, ஆனால், இந்த துஷ்பிரயோகங்களின் மூலம் ஆண்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

குழந்தை யாருடன் பயணிக்கிறது என்பதை கவனத்தில் கொள்ளவும். அது பள்ளி வேனாக இருந்தாலும் சரி, மூன்று சக்கர வாகனமாக இருந்தாலும் சரி. மிகவும் கவனமாக இருங்கள். எப்பொழுதும் குழந்தையுடன் பேசுங்கள், குழந்தைக்கு என்ன கெட்டது என்று தெரியப்படுத்துங்கள்.

இலங்கையின் நீதித்துறை அமைப்பின் செயற்பாட்டில், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு தனியுரிமையில் சாட்சியமளிப்பதற்கான வாய்ப்பு உள்ளது, ஆனால் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய நேரம் சம்பந்தப்பட்ட சம்பவத்தின் பின்னர் 10 ஆண்டுகள் வரை ஆகும்.

வறுமை, போதைப்பொருள், கல்வியறிவின்மை, விரக்தி, சமூக வெறுப்பு போன்ற பல நடைமுறைச் சூழ்நிலைகளால் நிகழும் குற்றங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் குறைக்க முடியாமல் இருப்பது வருத்தமளிக்கிறது. பள்ளி மட்டத்தில் இருந்து அதிகார மட்டம் வரை செயலில் தலையிட்டு பணிபுரிய வேண்டும். நடைமுறையில் பாடசாலை பாடத்திட்டத்தில் பாலியல் கல்வி சேர்க்கப்பட வேண்டும்.

குறிப்பாக நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கும் குழந்தைகளுக்கு, கொள்ளையடிக்கும் நபர்களிடமிருந்து தங்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து குழந்தைகளுக்கும் சமூகத்திற்கும் தொடர்ந்து தெரிவிக்கப்பட வேண்டும் என்பது சட்டத்தரணியான நஸ்ரின் நௌஷாத்தின் கருத்து.

இவ்விடயத்தில் தாய்மார்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.



NASREEN B.F. NAUSHADH
LL.M (READING) UNIVERSITY OF COLOMBO
Attorney-at-Law COMMISSIONER FOR OATHS,
COMPANY SECRETARY,
NOTARY PUBLIC

நேர் கண்டவர்:
ஷாமென் நிஸாம்டீன்
(ஆசிரியர் குழு உறுப்பினர்)
கட்டுகஸ்தோட்டை

# என்னை வெட்டாதீர்கள்

மாங்குடி எனும் ஓர் அழகிய கிராமம். பச்சைப் பசேலென காட்சியளித்த கிராமத்தின் மத்தியில் பெரிதாக, அழகாக கிளைகளைப் பரப்பி வளர்ந்து இருந்த ஒரு மரம் நான். நான் இக்கிராம மக்களின் உற்ற நண்பன் ஆவேன். நான் என் கிராம மக்களுக்கு காய், கனி ஆகியவற்றை வழங்குகின்றேன். மாங்குடி கிராமத்திற்கு வருகை தரும் அனைவரையும் கவரும் வகையில் நான் காட்சியளிக்கிறேன்.



எனது கபில நிறக்கொப்புகளில் கிராமத்து சிறுவர்கள் ஏறி விளையாடுவார்கள். அது மட்டுமன்றி, எனது உடம்பில் பறவைகள் இரவை கழிப்பதுடன் முட்டையிட்டு குஞ்சுகளையும் பொரிக்கின்றன.

நாய், பூனை போன்ற விலங்குகள் மழைக்காலத்தில் என் கிளைகளின் கீழ் தங்கிக்கொள்ளும். வழிப் போக்கர்கள் வெயில் காலங்களில் நிழலுக்காக வந்து ஒதுங்குவார்கள்.

இப்படி மகிழ்ச்சியாக நிம்மதியாக இருந்த மாங்குடி கிராமத்திற்கு திடீரென்று ஒருநாள், நகர்ப்புரத்திலிருந்து சில அதிகாரிகள் வருகை தந்தார்கள் என்னைச் சுற்றி சுற்றிப் பார்த்தார்கள் ஊர் தலைவரிடம் ஏதோ பேசினார்கள் எனக்கு ஏதோ ஓர் ஆபத்து வரப்போகின்றது என நான் உணர்ந்துகொண்டேன்.

கிராம மக்களிடம் கையொப்பமிடுவதற்காக வெள்ளைக்காகிதம் கொடுக்கப்பட்டது் இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டன. நூறு வருடங்களுக்கும் மேலாக, பரம்பரை பரம்பரையாக பாதுகாத்து வந்த என்னை இன்று உலக தேவைக்காக வெட்டி வீழ்த்தி விட்டார்கள்

இன்று நான் வெட்டப்பட்டு எவருக்கும் பயனளிக்காத ஒரு பிணமாக மாறியுள்ளேன்..

ஏன் மனிதர்கள் எம்மை வெட்டி வீழ்த்துகிறார்கள்? நாம் இல்லாவிட்டால் இவ்வுலகில் மனிதர்கள் சுவாசிப்பது நின்றுவிடும் அல்லவா?

மனிதர்களே! மரங்களை வெட்டாதீர்கள், சூழலை நேசியுங்கள்.

விதாத் ஷெஹூபீன்
முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம்
கஹடோவிட்ட, கம்பஹா

# அறிவியல் துணுக்கு

## இலங்கை பற்றி....

*இலங்கையின் தேசிய பறவை – காட்டுச் சேவல்*

*இலங்கையின் தேசிய மரம் – நாகமரம்*

*இலங்கையின் தேசிய விளையாட்டு – கரப்பந்து*

*இலங்கையின் தேசிய மலர் – நீலோற்பலம்*

*இலங்கையின் அழகிய நீர்வீழ்ச்சி – துன்கிந்த*

*இலங்கையின் தலைநகரம் – ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டை*

*இலங்கையின் நாணயம்– இலங்கை ரூபா*

*இலங்கையின் சின்னம் – வாளேந்திய சிங்கம்*

*இலங்கையின் மொத்த மாகாணங்கள் – 09*

*இலங்கையின் மொத்த மாவட்டங்கள் – 25*

*இலங்கையின் தேர்தல் மாவட்டங்கள் – 22*

## விடுகதைகள்

1. ஆள் ஏறாத மலையில் ஆயிரம் பூ பூத்திருக்கும். அது என்ன ? -நட்சத்திரம்

2. மழைக்காலத்தில் குடை பிடிப்பான். அது என்ன? -காளான்

3. போகும் இடம் எங்கும் கோடு கிழிப்பான். அவன் யார் ? -நத்தை

4. தலையை சீவினால் தாளிலே மேய்வான். அவன் யார் ? -பென்சில்

5. தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம். அது என்ன ? -அன்னாசி

## தகவல் அறிவோம்

### வெண்புறா

சமாதானத்திற்கும், அமைதிக்கும் சின்னமாகக் கருதப்படுகிறது.

புறா வளர்ப்புக்கு புகழ்பெற்ற நாடு போலந்து.

புறாக்களுக்கு ஞாபக சக்தி அதிகம்.

### எறும்பு

எறும்புகளுக்கு கண்கள் மிகத்துல்லியமாகத் தெரியும்.

உழைப்பதில் வல்லமை கொண்டவை.

முட்டையிடும் வகையைச் சேர்ந்தவை.

தொகுப்பு:
**பயாஸா பாஸில்**
ஆசிரியர் குழு,
துணிந்தெழு சஞ்சிகை

## இன்றைய வாசகம்

**“புத்தகம் என்பது ஆன்மாவின் கண்ணாடி”**

(கல்முனை சாஹிராவின் பவள விழாவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது)

# பவளம் காணும் ஸாஹிராவின் பரிணாமங்கள்















மாற்றம் ஒன்றே ஏற்றம் தரும் எனும் வகையில் கல்முனை சாஹிராக் கல்லூரியினது வரலாற்றுப் பின்னணியினை சுமார் 75 வருடங்களுக்கு முன்னோக்கிப் பார்க்கையில் கிழக்கிலங்கையின் கல்முனை கல்விமாவட்ட முஸ்லிம்களைப் பொறுத்தவரை இது ஒரு மாபெரும் அடையாளம் என்றே கூறக் கிடக்கின்றது. மட்டுமல்லாது, இத்தகு வரலாறு கண்ட சாஹிராவின் சில முக்கிய நிகழ்வுகளை மீட்டிப் பார்ப்பதென்பது இனிவரும் தலைமுறையினருக்கும் ஒரு சிறந்த பொக்கிஷமாக / பதிலாக அமையும் என்றால் அது மிகையாகாது.

உண்மையில் கல்முனை ஸாஹிராவின் பரிணாமங்களைப் பொறுத்தவரை பின்வரும் விடயக் குறிப்புகள் கட்டாயமானதாகும்.

01. வரலாற்றுப் பின்னணி,
02. பௌதீக, நிர்வாக மாற்றங்கள்,
03. மாணவர், ஆசிரியர் விபரம்,
04. சாதனைகளும் அடைவுகளும்,
05. வெளியீடுகள்,
06. பிறகுறிப்புக்கள்,

என இவை ஒவ்வொன்றும் தனித்தனியாகப் பேசப்பட வேண்டியனவாகும். இந்த அடிப்படையில் இருபதாம் நூற்றாண்டானது கிழக்குவாழ் முஸ்லிம்களின் கல்வி வரலாற்றினைப் பொறுத்தவரை பெரும் சவால்கள் நிறைந்த காலமாகும். இக்காலப் பகுதியில் நிலவிய மிஷனரிப் பாடசாலைகளின் தாக்கமானது குறித்த சிலருக்கே ஆங்கிலக் கல்விக்கு வித்திட்டது. இதனால் கவலை கொண்ட சமூக ஆர்வலரும், அப்போதைய கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான கேட்முதலியார் எம்.எஸ். காரியப்பர் உள்ளிட்ட ஒரு குழுவின் முயற்சியாகவே 1949.11.16 இல் இக்கல்லூரி ஆங்கில கனிஷ்டப் பாடசாலையாக ஓர் ஓலைக் கொட்டிலின் கீழ் தமக்குச் சொந்தமான 05 ஏக்கர் காணியில் நிர்ணயிக்கப்பட்டது. இதன்போது ஒரேயொரு ஆசிரியரும், தலைமை ஆசிரியராகவும் மர்ஹூம் எம்.ஐ.எம். அப்துல் காதர் அவர்கள் நியமிக்கப்பட்டதிலிருந்தே இதன் வரலாறு ஆரம்பிக்கத் தொடங்கியது. அன்று முதல் இன்று வரை பின்வரும் ஒவ்வொரு அதிபர்களின் காலமும் இக்கல்லூரியைப் பொறுத்தவரை ஒரு மைல் கல்லாகவே திகழ்ந்தது எனலாம்.

அந்த வகையில்...

16.11.1949 – 23.07.1950 – எம்.ஐ.எம்.அப்துல் காதர்,
24.07.1950 -06.08.1950 – எம்.எம்.இப்றாஹிம்,
07.08.1950 – 31.12.1950 – ஆர். பொன்னப்பா,
01.01.1951 – 31.12.1956 – எம்.ஐ.எம். மீராலெப்பை,
01.01.1957 – 14.02.1960 – கே.எல். சின்னலெப்பை (முன்னாள் வட்டாரக் கல்விப் பணிப்பாளர்),
15.02.1960 – 20.06.1961 – ஏ.எம்.மஜித் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்),
21.06.1961 – 31.12.1961 – எம்.எம். இப்ராஹிம்,
01.01.1962 – 31.12.1962 – வி.ஜி.என். சரிபுத்தீன்,
01.01.1963 – 30.03.1964 – ஜே.எம்.அப்துல் காதர்,
01.04.1964 – 15.10.1966 – கே.எம் அபூபக்கர்,
16.10.1966 – 31.01.1971 – எஸ்.எச்.எம் ஜெமீல் (முன்னாள் முஸ்லிம் கலாசார அமைச்சின் செயலாளர்)
01.02.1971 – 08.06.1972 – எம்.ஐ. ஜுனைடீன்,
09.06.1971– 16.08.1971 – எம்.ஐ.எம். மீரா லெப்பை,
17.08.1971 – 03.03.1972 – எம்.ஐ. ஜுனைடீன்,
04.03.1972 – 30.10.1972 – ஏ.ஆர்.ஏ. அஸீஸ் (அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியின் பீடாதிபதி),
01.11.1972 – 03.03.1975 – கே.எல். அபூபக்கர்லெப்பை,
04.03.1975 – 25.10.1979 – எஸ்.எச்.எம்.ஜெமில்,
26.10.1979 – 31.01.1985 – எம்.எம்.எம். இப்ராஹிம்,
01.02.1985 – 15.10.1989 – எம்.சி.ஆதம்பாவா,
16.10.1989 – 21.04.1999 – ஏ.எம்.ஹுஸைன்,
22.04.1999 – 20.05.1999 – எம்.எம்.இஸ்மாயில்,
21.05.1999 – 24.11.1999 – ஏ.எம்.முஸ்தபா,
25.11.1999 – 24.08.2000 – ஏ.பீர் முஹம்மட்,
25.08.2000 – 17.01.2006 – ஏ.எம். முஸ்தபா,
18.01.2006 – 07.07.2010 – திருமதி எஸ்.எச்.எம்.எம்.ஏ. காதர்,
08.07.2010 – 27.05.2012 – எம்.எம்.இஸ்மாயில்,
28.05.2012 – 28.05.2012 – எம்.எஸ்.எம்.ஹம்ஸா,
29.05.2012 – 31.12.2013 – ஏ. ஆதம்பாவா,
01.01.2014 – 03.04.2017 – பீ.எம்.எம். பதுருதீன்,
04.04.2017 – 02.11.2018 – எம்.எஸ். முஹம்மட்,
02.11.2018 முதல் எம்.ஐ.ஜாபிர்

போன்றோரின் நிர்வாக ஆளுமைகளின் கீழ் வெவ்வேறுபட்ட பௌதீக, நிர்வாக மாற்றங்களும்

நிகழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

உண்மையில் பாடசாலையின் பௌதீக ரீதியிலான மாற்றம் எனும் போது ஆரம்பத்தில் ஓலைக் கொட்டிலாக இருந்த கட்டமைப்பானது கட்டிடமாகப் பரிணமிக்க களம் அமைத்த காலமாக 1957 - 1960 களில் இருந்த அதிபர் கே.எல். சின்னலெப்பையின் காலப்பகுதியாகவே காண முடிகிறது. இக்காலப் பகுதியில் கல்வி அமைச்சராக இருந்த தஹநாயக்கவினால் இப்பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டமையும் விசேட அம்சமாகும். 9 ஆசிரியர்களும் 225 மாணவர்களும் இதன் போது இருந்தமையும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய மாற்றங்களேயாகும்.

தொடர்ந்தும் விளையாட்டுப் போட்டி, சாரணியர் இயக்கம், கல்லூரி வளவில் பள்ளிவாசல், க.பொ.த. சாதாரண தர விஞ்ஞான பீடம், தொழில்நுட்ப கூடம், வர்த்தக மண்டபம், அதிபர் விடுதி போன்றனவும் 1960 - 1965 வரையான காலப்பகுதியில் எழுந்த துரித மாற்றங்களேயாகும். மட்டுமல்லாமல், இக்காலப் பகுதியில் 09 மாணவர்கள் ஓ.எல். பரீட்சை எழுதும் வாய்ப்புப் பெற்றதும், மாணவர்களின் தொகை சுமார் 320 ஆக உயர்ந்தமையும் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

மேலும்1966களில்தாம்கல்லூரிவிடுதியில்முதல்தடவையாக க.பொ.த. உயர்தர கலைப்பிரிவும் ஸ்தாபிக்கப்பட்டதோடு, இக்கல்லூரி மஹா வித்தியாலயமாகவும் தரமுயர்த்தப்பட்ட வரலாறுகள் மறுக்க முடியாததாகும்.

இதேவேளை,1971களில்இப்பாடசாலையுடன்அப்போதிருந்த அல் - அமான் வித்தியாலயம் இணைக்கப்பட்டு தரம் 1-5 வரை மாணவர்களும் சேர்க்கப்பட்ட போதும் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் வருகையை அடுத்து இந்நிலை மீண்டும் இடைநிலைப் பாடசாலையாக இருந்து வந்ததோடு, கல்முனை ஸாஹிராக் கல்லூரி என்ற பெயர் மாற்றமும் பெற்றமை விசேட அம்சமாகும்.

மேலும் 1975 களில் தாம் தொலைபேசி வசதிகளும், கனணி விஸ்தரிப்பும், வெளியரங்குகளும், சுற்றிவர மதில்களுமென புதியதொரு வளர்ச்சி கண்டதோடு, கட்டிடங்களும் மூன்று மாடிகளும், வாசிகசாலை, பகுதித் தலைவர் முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டமையும், 1979களில் இப்பாடசாலையானது மஹாவித்தியாலய அந்தஸ்துப் பெற்றமையும் சிறந்த பதிவுகளே.

இப்படி படிமுறை வளர்ச்சிகளில் கல்முனை ஸாஹிரா நவீன மாற்றங்களை அணுகிய போது 1993 முதல் அகில இலங்கையும் பேசுமளவு அப்போதிருந்த வர்த்தக, வாணிப அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் அவர்களால் தேசிய பாடசாலையாகவும் இது தரமுயர்த்தப்பட்டிருந்தது. ஆனபோதும் இப்பாடசாலையின் சாதனைகளும் அடைவுகளும் 1964 களிருந்தே பேசப்பட்டமையும் வரலாறாகும்.

குறிப்பாக, 1969 களில் முதல் தடவையாக மூன்று மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர். அதேபோல் 1979 களில் விஞ்ஞானப் பிரிவில் 4ஏ சித்தி பெற்றமையும், 1985 களில் முதன்முறையாக பொருளியல் துறையில் மாணவன் ஏ.சி.ஏ. அன்சார் 4ஏ சித்தி பெற்றும் அதே காலப்பகுதியில் க.பொ.த. சாதாரண தரத்தில் மாணவன் ஏ.எம்.ஏ. சாதிக் 8 டீ சித்தி பெற்றமையும் இப்பாடசாலையின் வரலாற்றுச் சாதனைகளாகும்.

1990 - 2000 காலப்பகுதியில் 8 சாரணிய மாணவர்கள் ஜனாதிபதி விருது பெற்றமையும் 1991 களில் கிரிக்கெட் அணியானது அகில இலங்கை ரீதியில் இடம் பெற்றமையும் கோடிட்டுக் காட்ட வேண்டிய அடைவுகளேயாகும்.

2004இல் ஏற்பட்ட சுனாமிப் பேரலையின் போது பாடசாலையின் அநேக பௌதீக வளங்கள் சேதமுற்ற போதும் அதன் பின்னர் பதவியேற்ற பெண் அதிபரான மர்ஹூம் எஸ்.எச்.எம்.எம்.ஏ. காதர் அவர்களினால் மீண்டும் கட்டமைப்பு புதுப்பொலிவு பெற்றதோடு, இவரது காலமும் சாதனைகளைக் குவித்த காலமாகவே காணக்கிடைக்கின்றது.

2012 - 2014 களில் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் இப்பாடசாலை இணைக்கப்பட்டு, புதிய தொழில்நுட்ப கூடங்கள் அமைக்கப்பெற்றதோடு, 2018 களில் பாடசாலையின் நிர்வாகக் கட்டமைப்பிலும் பாரிய மாற்றங்களைச் சந்தித்தது. குறிப்பாக சிசிடிவி கெமரா, பிங்கர் மெஷின், ஆசிரியர் விடுதிகள் என அடுக்கிக் கொண்டே போகலாம். இதன் தொடராக தான் 2018.11.22 முதல் பதவியேற்ற தற்போதைய அதிபர் எம்.ஐ .ஜாபிர் அவர்களைக் காணலாம்.

உண்மையில் 1949 - 2018 வரையான பௌதீக, நிர்வாக மாற்றங்கள் ஒவ்வொன்றிற்கும் அவ்வவ்கால அதிபர்களின் ஆளுமையும் செல்வாக்குமே இன்றியமையாதது. இறுதியாக, 2018 களில் இப்பாடசாலையைப் பொறுப்பேற்று தற்போது வரை பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிபர் எம்.ஐ ஜாபிர் சிறந்த ஆளுமையும் தன்னம்பிக்கையும் தத்துணிவுமுள்ள ஒருவர் என்பதும் பேசப்பட வேண்டியதே!

விசேடமாக சாதனைகளின் குவியலாகவும், மாற்றங்களின் இருப்பிடமாகவும் இவர் காலத்தைப் பார்க்கலாம். அந்த அடிப்படையில், 2018 - “ஸாஹிரா பெஸ்ட்” எனும் தொனிப்பொருளில் பாரிய, கல்வி பௌதீக





அபிவிருத்திகளுடன் உயர்தர விஞ்ஞான பிரிவுக்கான விசேட செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதனால் 2019 மருத்துவத்துறைக்கு 04 மாணவர்களும், பொறியியல் துறைக்கு 11 மாணவர்களும் தெரிவானதோடு, மருத்துவத்துறையில் மாவட்டத்தின் முதலிடமும் இந்தக் கல்லூரிக்கே கிடைத்தது எனலாம். அன்றியும் 2020 களில் மருத்துவத்துறையில் 8 மாணவர்களும் பொருளியல்துறைக்கு 7 மாணவர்களும் தெரிவானதோடு, இங்கும் மருத்துவத்துறையில் தேசிய நிலையில் 3ஆம் இடத்தையும் பொறியியல் துறையில் மாவட்டத்தில் 2ஆம் நிலையும் கிடைத்தமையும் பெரும்அடைவுகளே!

21 களில் ஏற்பட்ட கொவிட்-19 தாக்குதலால் கல்வித்துறையில் பெரும் வீழ்ச்சிகளை ஏற்படுத்திய போதும் 22 களில் க.பொ.த. சாதாண தரத்தில் 23 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்றதோடு, இந்நிலை 2023 களில் 21 ஆக மாறியதும் மட்டுமல்லாது, புறக்கிருத்தி செயற்பாடுகளிலும் அதிக சாதனைகள் குவிந்த காலமாகவே இதனைக் காணலாம்.

குறிப்பாக, விளையாட்டு (கிரிக்கெட், தைக்கொண்டா) ஒலிம்பியாட், அறிவிப்பாளர் போன்ற பல நிகழ்வுகளில் தேசிய சாதனைகளும் எட்டப்பட்டுள்ளன.

இப்படி அதிபர் எம்.ஐ. ஜாபிர் அவர்களுடைய குறுகிய கால நிர்வாக காலத்தினுள் பாரிய அடைவுகளை, அபிவிருத்திகளை இப்பாடசாலை பெற்றமைக்கு இங்கிருக்கும் ஆசிரிய ஆளணியினதும், பாடசாலை சமூகம் சார் நிறுவனங்களதும் பூரண ஆதரவும் காரணமாயிருந்திருக்கின்றன என்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே!

உண்மையில் ஓர் ஓலைக் கொட்டிலில் 4 மாணவர்களையும் ஓர் ஆசிரியரையும் கொண்டு ஆரம்பித்த பயணம் இன்று 3000க்கும் மேற்பட்ட மாணவர்கள், 200க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், 6 க்கும் மேற்பட்ட பிரதி அதிபர்கள், 50க்கும் மேற்பட்ட கல்வி சாரா ஆளணியினர் என விஸ்வரூபம் பெற்றிருப்பதானது பாரிய வளர்ச்சிப் போக்கேயாகும். ஒருபுறம் கல்வியும் மறுபுறம் கலையும் விளையாட்டும் களைகட்டியதோடு மட்டுமல்லாமல், அவ்வப்போது சில வெளியீடுகளும் இங்கு பிரசுரிக்கப்படாமல் இல்லை என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

குறிப்பாக, 1965 களில் "மாணவர் மஞ்சரி" முதலாவது ஆண்டு மலராக வெளிவந்தது. அதேபோல், 1969 "அம்பு" எனும் விஞ்ஞானப் பத்திரிகை வெளியானது. 1976 யில் ஸாஹிறாப் பத்திரிகை பிரசுரமானது. இதன் தொடர்ச்சியாக அவ்வப்போது வருடம் தோறும் ஓ.எல், ஏ.எல். நினைவு மலர்களும் குவிந்தன. மேலும் 2014 முதல் "ஸாஹிரா" எனும் காலாண்டு சஞ்சிகையும் தொடர்ந்து வெளிவந்த வண்ணமுள்ளன.



இப்படி கல்முனை ஸாஹிராக் கல்லூரி தன் வேர்களால் விசாலித்து விழுதுகளால் பரந்து பட்டு நிற்கின்றதானது, எதிர்காலத்திலும் தன் இலக்கில் சிறந்த கட்டுப்பாடும் ஒழுக்கமுள்ள நற்பிரஜைகளை எப்போதும் போல பிரசவித்து சிகரம் தொடும் இமையாய் மாறும் என்பதில் மாற்றுக் கருத்துக்களே இல்லை என்பதே முடிவாகும்.

எம்.எஸ்.எம்.ஸாகிர்
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# நம்பிக்கை

"டிங்" என்ற கைபேசியின் நோடி.்.பிகேஷன் ஒலியில் கவனம் சிதறினாள் அகல்யா. யோசனையுடன் மெயில் பாக்ஸ் இனைத் திறந்து பார்த்தபோது எதிர்பார்த்த அஞ்சல் வரவில்லை. ஏதோ விளம்பர நிறுவனம் தங்களின் தள்ளுபடி விபரங்களை அனுப்பி இருந்தது.

சிறிதாக துளிர்த்த கோபத்துடனும் அலுப்புடனும் அதை டிலீட் செய்தவளின் கண்களில் பட்ட கலண்டரின் திகதி மனதை சோர்வாக்கியது. இன்றோடு இவள் வேலை இழந்து மூன்று மாதங்கள் கடந்திருந்தன. முன்னைய கம்பனி "Bon" நிறுவனத்தின் நினைப்பு புன்னகையை உதட்டில் நெளிய வைத்தது. கிட்டத்தட்ட ஒன்பது வருடங்கள்.



நிறுவனத்தின் ஒப்பந்தங்கள் இழக்கப்பட்டு, அடைக்கப்படுவதாக அறிவித்த போது மனம் கலங்கியது என்னவோ உண்மைதான். படித்த படிப்பும், இத்தனை வருட அனுபவமும் கை கொடுக்கும் என்ற நம்பிக்கை அதையும் மீறித்துளிர்த்தது. அத்தோடு Bon இன் சகோதர கம்பனி Scon ற்கு இவளே தொடர்பாளராக இருந்தாள். அதனால் Scon இல் எப்படியும் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையும் இருந்தது. மேலாக இவளது நான்கு நண்பர்களும் Bon நிறுவனத்தின் ஊடாக அங்கு வேலைக்குச் சேர்ந்தவர்கள். கடந்த ஏழு வருடங்களாக அவர்களின் விமானச்சீட்டு, மருத்துவ உதவிகள், கடன் வசதிகள் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றப்படுவது இவளின் சிபாரிசினால் மட்டுமே சாத்தியமானது அவர்களுக்கு.

"அகல்யா அகல்யா" என்று ஆயிரம் தொலைபேசி அழைப்புக்கள்... இவளது விடுமுறை நாட்களில்"

"நீ இல்லாமல் வேலையே நடக்கவில்லை" என்று சொல்லிக் கொள்வார்கள். "Bon நிறுவனம் மூடினாலும் நாங்கள் Scon நிறுவனத்தில் உனக்கு வேலை வாங்கித்தருவோம்" என்று அடித்துப்பேசி இருந்தார்கள். அந்த நம்பிக்கையில்தான் அவள் வேலை தேடுவதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை. கற்ற கல்வியும் அனுபவமும் நண்பர்களின் சிபாரிசும் என்றும் கைகொடுக்கும் என்று நம்பினாள்.அவ்வளவு அவர்களுக்காக உழைத்திருக்கிறாள்.

ஆனால், நாட்கள் நகர்கின்ற போது மனம் தடுமாறியது. Scon இன் நேர்முகத்தேர்வு

நடைபெற்று இன்றுடன் மூன்று நாட்கள் கழிந்திருந்தன. இன்று வெள்ளிக்கிழமை. திங்கட்கிழமை வேலை ஆரம்பிக்கவேண்டும். இன்னும் பணிஉத்தரவு மெயில் வரவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது.

கைபேசி அழைத்ததும் நம்பிக்கையுடன் எடுத்தாள். வேறொரு நிறுவனத்தின் அழைப்பு! இரண்டு மாதங்களின் முன் போனால் போகட்டும் என்ற ரீதியில் நேர்முகத்தேர்வுக்கு ஒன்லைன் இல் தோற்றி இருந்தாள். சுவாரஸ்யமின்றி இவளின் பதிலுக்கு திங்கட்கிழமை பணியில் சேருமாறு கோரி இருந்தனர், மீதி விபரங்கள் மெயில் இல் அனுப்புவதாகக் கூறி அழைப்பினைத்துண்டித்துக்கொண்டனர்.

மாலை வரை Scon இல் இருந்து எந்த அழைப்புமில்லை. நண்பர்களிடமிருந்தும் பதிலில்லை. கையிலிருந்த சேமிப்பு நிலமை நிகழ்கால யதார்த்தத்தைச் சுட்டிக்காட்ட இவளாகவே புதிய நிறுவனத்திற்குப் பணியில் சேர்ந்து கொண்டாள்.

அடுத்த வாரமே Scon இன் பணியிடத்தில் இவர்களின் மற்றொரு தோழி பணியிலமர்ந்தாள். செய்தி கேட்டு கலங்கிய அகல்யாவின் மனம் நொறுங்கிப்போனது. மேலாளரைக்கேட்ட போது, “நீங்கள் புதிய நிறுவனத்தில் சேர்ந்துவிட்டதாக அறிந்தோம். அதனால் உங்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது” என்றார். கூடி இருந்தவர்களின் ராஜதந்திரம் புரிந்தபோது மனது வலித்து ஊமையாகிப்போனாள்.

அவர்கள் இவளை நன்றாக கடந்த ஏழு வருடங்களாக உபயோகித்துவிட்டு கைகழுவியது புரிந்தது. உண்மை நெருப்பாய்ச் சுட்டது. ஆனால், பிரபஞ்சமும் கல்வியும் இவளைக் கைவிடவில்லை. மூன்று மாதங்களில் இவளின் திறமையைப்புரிந்த புதிய நிறுவனம் தட்டிக்கொடுத்தது. நிரந்தர நியமனம் கொடுத்து அழகு பார்த்தது. கைபிடித்து நடந்தவளை கம்பீரமாக நடக்கவைத்தது. பிரபஞ்சத்துக்கு நன்றி சொல்லிக்கொண்டாள்.

ஒரு மாலைப்பொழுது விரைவுரயிலில் வீடுதிரும்பிக் கொண்டிருந்த போது, இவளது தோளை யாரோ பற்றிய உணர்வு. திரும்பி பார்த்தபோது வறண்ட புன்னகையுடன் இவள் பழைய தோழி.

அவளது பழைய நிறுவனத்தில் அவளது இடத்தில் இருந்து இவளை நிராகரித்தவள். வழமையான நலவிசாரிப்புக்களின் பின்னர் “எப்படியாவது ஒரு நிரந்தரவேலை வேண்டும் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்” என்று சொல்ல அகல்யாவின் விழிகள் அகன்றன. பதில் கூறாமல் உற்று நோக்கினாள். இவளின் பார்வையைத்தாங்காது சினேகிதி விழிகளைத்தாழ்த்திக் கொண்டாள். குற்ற உணர்வு அவளை கொன்றிருக்க வேண்டும். சிறு புன்னகையுடன் அடுத்த நிறுத்தத்தில் இறங்கிக்கொண்டாள். பதிலேதும் பேசவில்லை.

வானத்தை நிமிர்ந்து பார்த்தாள். தெளிவாக இருந்தது. பிரபஞ்சத்தின் மீது இன்னும் நம்பிக்கை அதிகமானது.






# கத்தாரில் இந்தியப் பிரபலங்கள் கலந்து கொள்ளும் SIGTA விருது விழா நுழைவுச்சீட்டு அறிமுக நிகழ்வு...!

SIGTA விருது விழா குழுவின் ஏற்பாட்டில் நுழைவுச்சீட்டு அறிமுக நிகழ்வு நவம்பர் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6:30 மணிக்கு ஐ.சி.சி அசோகா ஹாலில் விமர்சையாக நடைபெற்றது.

இந்தியப் பிரபல நடிகர், நடிகைகள் கலந்து கொள்ளும் SIGTA விருது விழா எதிர்வரும் டிசம்பர் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு கியூ.என்.சி.சி அல் மயாஸ்ஸா தியேட்டரில் இடம்பெறவுள்ளது.

நான்காவது முறையாக நடைபெறும் இந்த நிகழ்வில், கத்தார் வாழ் இந்திய, இலங்கை தமிழ் மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அதற்கான டிக்கெட்டுக்கள் தற்போது QTicket.com இணையத்தளத்தில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. இந்த நிகழ்வுக்குரிய அமைப்புகளின் தலைவர்கள், கலைஞர்கள் மற்றும் தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் எமது ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகப் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் அவர்களுடன் முகாமையாளர் ஹுபைப் முஸம்மில் அவர்களும் கலந்து சிறப்பித்தமை விசேட அம்சமாகும்.







தகவல் :
ஹப்ஸா பஹ்மீர்
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# கத்தார் தமிழர்களின் மகிழ்வரங்கம் நடாத்திய தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்வு

கடல் தாண்டிய தமிழ் உறவுகள் ஒவ்வொரு பண்டிகை தினங்களிலும் தாயகத்தையும் தாயக உறவுகளையும் தவற விட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தன் எண்ணவலைகளில் கொண்டாட்டங்களை தாங்கும் நேரத்தில், தாயக கொண்டாட்டங்களை மிஞ்சுகிற அளவு "கத்தார் தமிழர்களின் மகிழ்வரங்கம்" இவ்வருடம் தமிழ் உறவுகளை தீபாவளி தினத்தில் வாழ்த்தி வரவேற்றது.

தீபாவளியை முன்னிட்டு, ஈரானியன் பன்னாட்டு பள்ளியில் கடந்த நவம்பர் 8 வெள்ளியன்று இடம்பெற்ற 15 ஆவது ஆண்டு தீபாவளிக் கொண்டாட்டமானது கத்தாரில் முதன்முதலாக 60 இற்கும் மேற்பட்ட சகோதரிகள், இல்லத்தரசிகளின் "மாபெரும் கோலாட்ட கொண்டாட்டத் திருவிழா" என்னும் பதாகைகளுடன் இடம்பெற்றமை கத்தார் வாசிகளிடையே ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் ஒரு சேர தூண்டியது எனலாம்.

இரவு 7 மணிக்கு கத்தார் தமிழர்களின் மகிழ்வரங்கத்தின் நிறுவனர், துணை நிறுவனருமான வரதராஜன், இந்திரா வரதராஜன் ஆகியோரின் கூட்டு முயற்சி மற்றும் முன்னெடுப்பில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்பட்டது.

தீபாவளி கொண்டாட்டத்திற்கு வருகை தரும் ரசிகர்களையும் கத்தார் தமிழர்களின் மகிழ்வரங்கத்தின் உறுப்பினர்களையும் கத்தாரில் இருக்கக்கூடிய முன்னணி குழுமங்களின் தலைவர்களையும் வரவேற்பதற்காக வாயிலில் வரவேற்பாளர்களிடம் கற்கண்டும் சந்தனமும் மலர்களும் கொடுத்து




இன்முகத்துடன் வரவேற்றமை, அவர்களது பண்பும் தாயகத்தில் நுழைந்த உணர்வையும் தந்தது எனலாம்.

வரவேற்பைத் தொடர்ந்து கண் கவர் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. சொந்த ஊர்புற தின்பண்டங்களின் தொகுப்பு மற்றும் விற்பனை நிலையங்களும் மகளிர்களுக்கு மருதாணி அலங்காரம் என அரங்கில் ஒரு தனி கண்காட்சிக்கூடம் போல் அமைந்திருந்தது.

சிறுவர்களின் கண்கவர் நடனங்களும், பரதநாட்டியமும், துள்ளல் பறையிசையின் அட்டகாசமான துள்ளியெழும் பறையிசையும், ஆதிரன் சிலம்பக் கலைக்கூடத்தின் சிலம்பாட்டங்களும், பாடகி, பாடகர்களின் நயமிக்க பாடல்களும், ஆடவர், மங்கையர்களின் கோலாகலமான அற்புத நடனங்களும் கண்களுக்கு விருந்தளித்தன.

கலை நிகழ்ச்சிகளில் மிகுந்த மகிழ்ச்சியுற்ற பார்வையாளர்களும் ரசிகர்களும் அரங்கத்தினூடே தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வண்ணம் ஆடியும் பாடியும் கரவொலிகளையும், சீட்டியொலிகளையும்




எழுப்பி உற்சாகத்துடன் அக மகிழ்ந்தனர். வந்திருந்த அனைவரும் சிறப்பு விருந்தினர்க-ளாகவே கௌரவிக்கப்பட்டனர்.

வருகைதந்த தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மணிபாரதி, முன்னாள் தமிழ்ச்சங்கத்தின் தலைவர்களான இஸ்மாயில் மற்றும் ராஜ விஜயன், மஹாதேவன், திருமதி ஷர்மிளா, யாழினி குமார், தாஹீர், சித்திக், நவீன பிரியா, டிக் டொக் பிரபலம் , வலையொளி நட்சத்திரங்கள் ரியாஸ் கான், நந்தினி, கைருனிசா பிலால், பாண்டியன், உயர்திரு சேகர் , டேனியல் , குரு, கார்த்திக், பிரசாத், உதயகுமார், நவாஸ், மகேஷ் அழகு, திருமதி அன்னி, அனுஷியா பாலாஜி, சக்திவேல், பிரசன்னா, சதிஷ், செல்வலட்சுமி ஆகியோர் இவ்விழாவுக்குச் சிறப்புச் சேர்த்தனர்.

துள்ளல் பறைக் குழுவினரின் பறையொலி எங்கும் அதிர்ந்த வேளையிலே ஆதிரன் சிலம்பக் கலைக்கூடத்தில் அதிரடியான சிலம்பச் சூழல்களுக்கு பிறகு ரசிகர்கள், பார்வையாளர்கள், கத்தார் மக்கள் என அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த மாபெரும் தீபாவளி கோலாட்ட கொண்டாட்டத்தின் சிறப்பு நிகழ்ச்சியான “பெண்களின் கோலாட்டம்” சிறப்பாக நடந்தேறியது.

கோலாட்டத்தில் கலையாடிய சகோதரிகளின் அலங்காரங்களும் மஞ்சள் நிற சேலையும் நடனத்திற்கு ஏற்றார் போல் சிறப்பாக அமைந்திருந்தது. இந்த தீபாவளிக் கோலாட்ட கொண்டாட்ட சிறப்பு நடனத்திற்கு தனுஷியா வரதராஜன் பயிற்சி அளித்து நடன இயக்கம் செய்தார். இக்கலை நிகழ்வுக்கு இவரது பெரும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கனவாகும். நிறைவான இரவு நேர விருந்திற்கு பிறகு நிகழ்வில் பங்கு கொண்ட அனைத்து முக்கிய தலைவர்களுக்கும் விருந்தினர்களுக்கும் கத்தார் தமிழர்களின் மகிழ்வரங்கத்தின் நிறுவனர் வரதராஜன், துணை நிறுவனருமான இந்திரா வரதராஜன், மற்றும் நிருஷியா வரதராஜன், விஷ்ணு செல்வ குமார் ஆகியோர் நினைவுப் பரிசும் சால்வையும் அணிவித்து மரியாதை செலுத்தி கௌரவித்தனர். இவ்வாறாக சிறப்பான முறையில் இடம்பெற்ற தீபாவளிக் கொண்டாட்டம் இனிதே நிறைவுற்றது.









தகவல் :
ஹப்ஸா பஹுமீர்
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் விளம்பரங்களையும்
## குறைந்த கட்டணத்தில்
## இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249




#Thuninthelu www.skytamilnews.com